www.padippakam.com

கதவு

ஜனவரி 2000

காலாண்டிதழ்

இதழ் எண் - 08

தனிச்சுற்றுக்கு மட்டும்

நன்கொடை ரூ. 10/-

படிப்பகம்

www.padippakam.com

'மானமும் அறிவும் மாந்தர்க்கு அழகு'

சமதர்மம் பேசுகிறோம். எப்படிப்பட்ட சமதர்மம் ஏற்பட்டாலும் நம் சமுதாயமும் நாடும் பொதுஉடைமைச் சமுதாயமாகவும், பொதுஉடைமை நாடாகவும் ஆகும் வரையில் ஏழை - பணக்காரர் இருந்துதான் தீருவார்கள். மற்றும் முதலாளி தொழிலாளி, எஜமான் வேலைக்காரர்கள் இருந்துதான் தீருவார்கள். இந்த நிலை இருக்குமானால், இருக்கும் வரை - ஒருகட்டுத் திட்டம், ஒழுங்கு முறை இருந்தால்தானே மனித வாழ்வும் காரிய நடப்பும் சரிவர நடந்தேற முடியும்.

- தந்தை பெரியார்

('விடுதலை' தலையங்கம் 6.7.1972)

வாழ்த்துக்களுடன்

பகுத்தறிவாளர் கழகம்

அருப்புக்கோட்டை.

With Best Compliments From

B. PARTHASARATHI

AGENT L.I.C. OF INDIA

Member of Divisional Manager's Club

Off :
2/14-1A, Sound Ramalingam Street,
Chinnapuliampatti,
ARUPPUKOTTAI - 626 101.
© 72745

Resi :
25, Ramanuja Kooda Street,
Chinnapuliampatti,
ARUPPUKOTTAI - 626 101.
© 72085

படிப்பகம்

www.padippakam.com

கதவு : 8

ஜனவரி 2000

வெளியீடு :

கருத்தாளர் வட்டம்
(A unit of APPA)
5-36-4அ, பாரதி நகர்,
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு
அருப்புக்கோட்டை - 626 101.
✆ 04566 - 73322.

நிர்வாக ஆசிரியர் :

மதிகண்ணன்
(கலைவழி மக்கட் பணியம்)

துணை ஆசிரியர் :

முரளி

ஆசிரியர் குழு :

ஜெயராம்
ஜீவநேரு
அழகு பாரதி
அன்புச் செல்வன்

கணனி :

சிவா லேசர் பிரிண்டர்ஸ்
அருப்புக்கோட்டை.
✆ 04566 - 72768.

அச்சு :

சேகர் அச்சகம்
அருப்புக்கோட்டை
✆ 04566 - 70164.

மதிப்புரைக்காக நூல் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

படைப்புகள் படைப்பாளிகளின் கருத்துக்களையே முன்வைக்கின்றன.

சந்தா
ஓராண்டு ரூ. 40/-
ஐந்தாண்டுகள் ரூ. 150/-
வெளிநாடு ரூ. 300/- (ஆண்டுக்கு)
MO.DD நிர்வாக ஆசிரியர் பெயரில் அனுப்பவும்.

அன்பு நண்பர்களே...

கையில் இருக்கும் இதழில் மாற்றங்களை உணர்வீர்கள். இவற்றில் நிறைய தங்கள் ஆலோசனைப்படிதான். இன்னும் கூட நீங்கள் எழுதிய, சொல்லிய மாற்றங்களும் உண்டு. எழுத மறந்த, சொல்ல மறந்த மாற்றங்களும் உண்டு. அவற்றையும் எழுதுங்கள், சொல்லுங்கள். உள்வாங்கி, உணர்ந்து வெளிப்படுத்துகிறோம்.

'எச எழுத்து' இந்த இதழில் வரவேண்டியதும் சேர்த்து அடுத்த இதழில் வரும்.

கதவிற்கு ஐந்தாண்டு நன்கொடை ரூ. 150/- அனுப்புவர்களுக்கு ஒரு கவிதை நூல் அனுப்ப முடிவு செய்துள்ளோம். நீங்களும், உங்கள் நண்பர்களும் கவிதை நூலைப் பெற முயற்சிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்,

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர் குழு.

அட்டை படம் :
அட்டையில் வெட்டுத்துணி ஒட்டுவேலை
'எங்கள் கிராமம்' என்ற தலைப்பில்
கு. ராமச்சந்திரன் வயது 12
கட்டங்குடி.

படிப்பகம்

www.padippakam.com

மாதிரியில்லா மொழி உலகமும் பிரக்ஞையில்லா கலகமும்

- யவனிகா ஸ்ரீராம்

மொழியின் யதேட்சையான அத்தனை விளைவுகளும் சமூக இருப்பின் வரையறைகளை ஒழுங்கு செய்வதாகக் கூறிக்கொண்டு அக, புற யதார்த்தங்களை ஆளுமையின் துறைகளுக்கு ஒப்புக்கொடுக்க முனைந்ததேயன்றி விடுவிக்கப்பட்ட கழன்று உருவாகும் ஒரு புதிய பல்முனை உலகம் பற்றிய உள்மௌனங்களை காணமுடியவில்லை என்பதுதான் அரசியல் மயப்படுத்தப்பட்ட இன்றைய எல்லாத் தன்மைகளுக்கும் மூலகாரணமாகிறது.

மொழி ஒரு சாத்தியமான உருதான். எல்லாவிதமான தர்க்க நியாய எதிர் இணை முரண்களின் அடியில் விலகி வரும் இன்னும் பல சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது என்பதால் அவ்வகை மௌனத்திற்கு மொழியே எங்ஙனம் தடையாகவும் இருக்கிறது என்பது, உருவாக்கப்பட்ட மொழிக்குள் கேள்வியாகவும் இருக்கிறது.

இதுவரை மனிதன் என்கிற உயிரி வாழுகின்ற ஒரே கோளாக மனிதனாலே அறியப்பட்டிருக்கிற இப்பூமியானது பிரக்ஞைப் பூர்வமாக ஆதியிலிருந்தே உதாரணங்களால் கட்டமைக்கப்பட்டு விட்டது ஒரு பெரிய அவமானம். இப்பூமியில் தோன்றியிருக்கிற இன்னும் தோன்றிக் துலங்கவிருக்கிற யாவும், எப்போதும் உதாரணங்களால் அடையாளப்படுத்தப்பட்டு "போல" எனும் குறியீடுகளால் தற்காலிகப் பூர்த்தியை ஏற்றுக் கொண்டு வந்திருப்பதை நாம் காணலாம்.

இன்னதென வரையறுக்கவே மொழி பல்லாண்டு காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் வழியே சராசரிப் புரிதலுக்கு மட்டுமே இலக்கானதுதான் இப்பூமியில் இருக்கும் யாவையும் உதாரணங்களை அடிப்படையாக்கி இதனை, இதனால் இவையென்று புரிந்து கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இது ஏன், எதற்கு, எப்படி என்பதன் மறு விளைவாகக் கொள்ளலாம்.

ஆன்மீகத்திலிருந்து அரசதிகாரம் வரை பரிணாமம் பெற்று விட்ட ஆதி மனித நிலை, தன் காட்சிக்கு வசப்பட்ட இவ்வுலகை ஒன்றோடு, ஒன்று குறிப்பிட்டு இதைப்போல இருப்பதால் அந்தப்போலொன்று, எதைப்போலிருக்கிறது என்பதையே தீர்வாய் முன் வைக்கிறது. இலக்கியத்தின் அத்தனை இயங்கு தளங்களிலும் வேறு இயல் சார்ந்து மொழியடிப்படை யாவற்றிலும் உதாரணங்களின் ஆட்சி மேலாதிக்கம் பெற்றிருப்பதை உதாரணங்களின்றியே ஒப்புக்கொள்ள முடியும். ஆக பூமியின் புறவயப் பொருட்கள் யாவும் புழங்கு நிலை அடையாளம் பெற

படிப்பகம்

www.padippakam.com

மொழியின் குறிப்பான அடைமொழிகளையே சுமந்தன என்பதைக் கவனிக்கும்போது உதாரணப் பெயர்களையே ஒவ்வொன்றுக்குமாக தன்னிலைப் பெயர்களாகக் சூட்டிக்கொண்டு வந்து விட்ட எளியமுறை அறிவு வளர்ச்சியின் சவலைத்தனத்தைக் காட்டுகிறது. ஒவ்வொன்றின் தன்னிலையையும் அதனளவிலேயே அதன் பண்பாகக் கருதியதை குறிப்பானாக் அடையாளப்படுத்த முடியாமையினால்தான் இங்கு குறிப்பீடுகள் மட்டுமே மேலாதிக்கம் செய்கின்றன.

இவ்வகையான குறிப்பீடுகளின் மொத்தத் தத்துவ பண்பே யாவற்றையும் தீர்மானிக்கிறது. குறிப்பீடுகளை ஒழுங்குபடுத்தும் முறையே உதாரணங்களாய் கட்டமைக்கப்படுவதால், உதாரணத்திற்கான மொழியறிவே சமூக, உள்/புறவய இயங்குதல்களை ஒப்பனை செய்கிறது. இந்த ஒப்பனையின் பாவனைகள் அதிகாரத்திற்கான தளத்தினை உருவாக்கி சக்திகளுக்கு ஆளுமைகளை, அதிகாரங்களை ஒப்புக் கொடுக்கிறது.

இதிலிருந்து உதாரணங்களே நம்மை ஆள்வதை, அல்லது உதாரணங்களாய் நாம் இருப்பதை, உதாரணங்களுக்காக இயங்குவதை இன்னும் மொழிவசப்படாது கிடக்கும் நம் மௌனங்களின் வழியே புரிந்து கொள்ளலாம். பிறப்பிலிருந்தே மனிதனுக்கு உதாரணங்களின் வழியேதான் இவ்வுலகம் உணர்த்தப்படுகிறது. அவன் பணம், மகிழ்ச்சி, துன்பம், தோல்வி, வெற்றி, ஈடுபாடு, கடமை, பலன், ஒதுக்கம், விலகல், கட்டுப்பாடு, சரி, தவறு, துய்ப்பு, தவிர்த்தல், பெறுதல், அடைதல், விருப்பம், நிராகரித்தல், கோபம், ஒழுக்கம், போராட்டம், யாவும் உதாரணங்களால் நம்பிக்கையூட்டப்படுவதற்கும் ஏதுவான நிலையை கைக்கொண்டுள்ளன.

பொருளின் துலக்கம் தன்னிலையின் இயல்பான பெயர் சூட்டலுக்கு, மொழி என்றைக்கு பாவனையை அல்லது "போல" எனும் உதாரணங்களைக் கைக்கொண்டதோ, அன்றே மொழி தன் அலகுகளில் வரிவடிவ ஒப்பனைகளுக்கு தன்னை வகைப்படுத்திக் கொண்டது. அதனாலேயே அது சுட்டும் உலகினை போலியாகவும் ஆக்கிவிட்டது. இது மொழியின் அகங்காரம் தவிர வேறில்லை. அகங்காரம், அதிகாரத்தின் இயங்குநிலைதானே! அத்தோடு மேற்கூறிய இரண்டும் உதாரணங்களால் உருப்பெற்றதாய் இருப்பதாலே அவை எங்கு தோன்றினாலும் தற்காலிக இடத்தையே, இருப்பையே காட்டி நிற்கின்றன. தொடர்ந்த இருப்பு என்பதும் "அது" வாகவே கருதப்படுவதும் சாத்தியமில்லாமல் போகிறது. இவ்வாறு உதாரணங்கள் மொழியில் புகும் இடமே அதிகாரம் உள் நுழையும் திறப்பாகவும் இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். இவ்வகையான உதாரணங்களுக்கு இருப்பிடம் இப்பூமிதானே என்றாலும் எவ்வகை இருப்பிலிருந்து இவ்உதாரணம் எவ்வகை இருப்பிற்குள் நுழைகிறது என்பது முக்கியமானது. ஆகவே இவ்விடத்தில் உதாரணப்பட்டுவிட்ட நிராதரவான அதிகார மறுப்பைச் சுமந்து திரியும். ஒன்றின் விழிவு முன்னகர்வதை தடுக்க இயலாமல் போவதும் நிகழத்தானே வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

வலிமையான உதாரணங்கள் அறிவின ஒப்பனை பாவனை அதிகாரத்தை கையகப்படுத்தும் போது, மறுக்கப்பட்டதாய், அறிவற்றதாய் உதாரணிக்கப்பட்ட உதாரணங்கள் முதலில் எதை உதற வேண்டியிருக்கிறது என்பதே அதிகார வெளியில் முக்கியத்துவம் அடைகிறது.

நாம் உதாரணங்களாய் இருப்பது, மற்றெல்லா உதாரணங்களோடு ஒப்பிடப்படுவது, அல்லது கீழிறக்கப்படுவது, படிமுறைப்படுவது போன்றவற்றில் இருந்து அல்லது ஒடுக்கப்படுவதில் இருந்து வேறு ஒரு வெளியை வேண்டுவது என்பது மீண்டும் உதாரணத்தின் வழியே சாத்தியப்படாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மொழியின் ஒப்பனைகளை சிதைக்கும் முகமாக, பாவனை அதிகாரத்தின் இயங்குதலில் இருக்கும் பெயர் சூட்டலுக்கு எதிராக இயங்க வேண்டியது அல்லது மொழிக்குள், வரிவடிவத்திலிருந்து உதாரணத்திற்கு அலையும் புள்ளியை கைப்பற்றுவது போன்றவற்றை யோசிக்க வேண்டும். மொழியை குறிப்பீடுகளில் இருந்து விடுவித்து தன்னிலையில் கொண்டு போய் வைப்பது என்பது உலகத்தை மீண்டும் ஏதோ ஒரு வகையில் "மொழிவழி புரியலாம்" என்பதற்கு ஒப்பாகும். இவற்றிலிருந்துதான் பல உலகங்களுக்கான உதாரணமற்ற மொழியின் சாத்தியப்பாடுகள் உருவாக முடியும். மொழி தோற்றம் கொண்ட இடத்தில் அதை சந்தேகிப்பதுதான் விலக்குவது தான், அதுவும் உதாரணங்களால் கட்டமைக்கப்பட்டவற்றை உதவுவதுதான் பன்முகத் தன்மைகளுக்கு இடமளிக்க ஏதுவாய் இருக்கும். இதன் நேரடி அர்த்தம் மொழியை இழந்து விடுவது அல்ல. மொழியிலிருந்து உதாரணங்களை களைவதுதான். ஒரு மொழியிலிருந்து உதாரணங்களை களைந்து விடுவது ஏறக்குறைய அதிகாரத்தை நீக்கி விடுவதாகத்தான் அர்த்தப்பட வேண்டும்.

இதற்காக மொழியின் தோற்றுவாயை தேடிப்போக வேண்டிய அவசியம் இல்லை. எங்கு மொழி எந்த அதிகாரத்திற்கு வழியற்றுக் கிடக்கிறதோ, எங்கு மொழி வெறும் மௌனமாக நிலை பெற்றிருக்கிறதோ, எங்கு மொழியின் பகடி செய்யப்படுகிறதோ, எங்கு மொழி கூறியது கூறலாய் வெறுக்கப்படுகிறதோ, எங்கு மொழியின் புனிதங்கள் அவமானப்படுகிறதோ, நிராகரிக்கப்படுகிறதோ, எங்கு ஒரு மொழியின் சாராம்சம் அர்த்தமின்மையை உருவாக்குகிறதோ, அங்கிருந்தே தன்னிலைக்கான மொழியின் மீட்பு வேலைகள் துவங்கப்படலாம். அதை மீட்டெடுக்கும் சக்திகளின் இயங்குதல் ஒரு அதிகாரமாகத்தானே உருமாற்றம் அடையும் என்று வாதம் வந்தால், அது உதாரணத்திலிருந்தே வருகிறது. உதாரணத்திற்கு இன்னும் பக்க பலம் சேர்க்கிறது அல்லது உதாரணத்துணை கொண்டு மீட்புச் சக்திகளை அழிக்கப்பார்க்கிறது. ஏனெனில் உதாரணங்களால் ஆளப்படும் நாம் மொழியை உலகமாய் பாவனை செய்து கொண்டிருப்பதை அதை எதிரொலிக்கும் மாதிரிகளாய், பிம்பங்களாய் அல்லது உதாரணங்களாகவே இருப்பதை எப்படிச் சகிப்பது. நம் தன்னிலைகளை யதேட்சையாக கொண்டிருக்கும் தன்னிலையானதே இவ்வுலகம். அதையார் உதாரணமாக்குகிறார்களோ, அவர்கள் அதிகாரத்தை கையிலெடுக்கிறார்கள்.

படிப்பகம்

நிராதரவானவர்களின் மொழி மீண்டும் உதாரணங்களில் இருந்து துவக்கப்பட்டால் மொழியின் ஒப்பனை மிகுந்த அறிவின் பாவனை அதிகாரத்திற்கே நாம் மீண்டும் அடிமைப்படுவதை உறுதி செய்யும். மனிதப் பிரக்ஞையற்ற இயற்கையின் தன்னிலையில் இருந்தே நாம் நமக்கான உணர்வைப் பெற முடியும். இது உதாரணமல்ல. ஏனெனில், நமக்கு உயிர் வாழ்தலோடு கூடிய இவ்வுலகத்தை உதாரணிக்க வேறொரு மாதிரி உலகம் இப்பிர பஞ்சத்தில் இல்லை என்பதுதான் பரிதாபம். இப்பூமியைப் போல் அற்புதமான உலகம் வேறெங்கும் கிடையாது என்று பிரகடனப்படுத்தும் நமக்கு, ஆமோதிக்கவோ, மறுப்புச் சொல்லவோ சமிக்ஞைகள் இல்லை. அதனால்தான் நமக்குள் அதிகாரம் எப்போதும் உலகளாவி மேல்நிலையாக்கம் பெறுகிறது.

உலக முழுமைக்குமான கோட்பாடுகளாக ஆன்மீகத்தையும் வரலாற்றையும் மொழிக்குள் உதாரணங்களாய் முன்னிறுத்தியே தீர்க்க தரிசிகளும், அரசு முறைசார்ந்த பிரதிநிதிகளும் தங்களைக் கட்டமைத்துக் கொண்டார்கள் என்பதே நடந்து வந்திருக்கிற உண்மை. இதில் இலக்கியம் அரசியல் மயப்படும்போது இவ்வுதாரண அருமைகள் எப்படி இல்லாமல் போகும். எதிர்வினையே கூட இன்னொரு அரசியல் அமைப்பாகுமே ஒழிய விடுதலை இலக்கியம் சாத்தியமில்லை.

சித்தர்கள் கூட லோகதாயங்களின் மேல் கட்டற்ற விமர்சனங்களை வைத்திருந்தாலும், இறை என்ற மொத்ததத்துவ பண்பிலிருந்து அவர்களாலும் தன்னிலை விடுதலையை பேச முடியவில்லை. உதாரணங்களால் ஆன மொழியறிவின் மயக்கத்திலிருந்து உலகத்தைப் பார்த்தார்கள்.

சமூக, பண்பாட்டு, பொருளாதார, தொழில்நுட்ப நெருக்கடிகளுக்கிடையே உருவாகிவரும் ஒரு புதிய மொழி தன்னிலை இழந்தவர்களால் உதாரண வகைப்படாமல் அதே சமயம் கவனிப்பாரின்றியும், காரண காரிய மற்றும் எல்லாவகை தர்க்க நியாய, உதாரணப்பாவனை செய்கிறவற்றுக்கும் அதன் அதிகாரத்திற்கு எதிராகவும் பித்து மொழியாக உருக்கொள்கிறது. மனநோய் விடுதிகள் அதிகமாகி வரும் இந்நாளில் அத்தியாவசியங்களுக்கான போராட்டங்கள் குறுகி, அனைத்து பிரமாண்டங்களுக்கும் பின்னணியில் உள்ள அறிவுப்பயங்கரத்தின் மீதாக பிரக்ஞையற்ற கலகமாய் உருக்கொள்வதை பல கோணங்களுக்குள் ஆராயலாம். பைத்தியக்காரர்களின் மொழியே இன்று தன்னிலையில் இருக்கிறது. அதுவே பசியையும், காமத்தையும் மனிதப் பிரக்ஞையற்ற இயற்கைக்குள் எதிர்த்து பிரக்ஞையற்ற நிலையில் கலகம் புரிகிறது. போக விஞ்ஞானத்தின் அத்தனை விளைவுகளையும் சுமப்பது ஒருபோதும் மனிதத் தலைவிதியாகி விடாது.

O

www.padippakam.com

புகலிட இலக்கியம்
(சில வரலாற்றுக் குறிப்புகள் - 2)

எம்.ஆர்.ஸ்ராலின்

பாரிஸ்

ஆரம்பகால புலம்பெயர்இலக்கிய முயற்சிகளின் பொதுப்பண்புகள் குறித்தும் அவற்றுக்கான வரலாற்றுப் பின்னணிகள் குறித்தும் சில அவதானங்களை சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் இவ்வகை அவதானங்கள் மட்டுமே புகலிட இலக்கியத்துக்கான பொதுப்பண்பாக அறுதியிட்டுக் கூறுவதோ அன்றி இவற்றை புகலிட இலக்கிய முயற்சிகளின் முழுப்பண்பாக வரையறுப்பதுவோ அதன் அர்த்தமாகாது. பல்வேறு நாடுகளில் இருந்தும் பலதரப்பட்ட வகைகளில் மேற்கொள்ளப்பட்ட இலக்கிய முயற்சிகளில் நான் குறிப்பிட்ட பொதுப்பண்புகளில் இருந்து வேறுபட்ட படைப்புகளும் வெளியீடுகளும் வந்திருந்தன. வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஐரோப்பா, அவுஸ்ரேலியா, கனடா, ஸ்கண்டிநேவிய நாடுகள் என்று புகலிட இலக்கியம் காலூன்றினாலும் ஐரோப்பாவில்தான் எண்ணிக்கையளவில் கூடிய சஞ்சிகைகளும் வெளியீடுகளும் வருவதை அவதானிக்க முடிகிறது. அதிலும் இங்கிலாந்து மற்றைய ஐரோப்பிய நாடுகளை விட சற்று வித்தியாசமாக அணுகி நோக்கத்தக்கது. காரணம் அங்கிருந்து தற்போது பெரிதாக இலக்கிய முயற்சிகள் இடம்பெறாவிடினும் அங்குவெளியான பல இதழ்களும் வெவ்வேறு கோணங்களில் தம்மை இனம்காட்டி நின்றன.

நான் அவதானித்தவரை ஏனைய புலம்பெயர் நாடுகளில் இருந்து முற்றாக வேறுபடும்வண்ணம் இங்கிலாந்து சஞ்சிகைகள் தத்தமக்கேயான தனித்தன்மைகளை வெவ்வேறு கோணங்களில் கொண்டிருந்தன. பருமட்டான வகைப்படுத்தலில் மூன்றுவகையாக இவற்றினை பிரித்தறியலாம்.

1. *தொகையளவில் அதிக பிரதிகளை (சுமார் 2500 - 3000) கொண்டபோதிலும் ஆழமான இலக்கியத் தேடல்களோ படைப்பிலக்கிய முயற்சிகளோ அதிகம் அற்று ஜனரஞ்சக போக்கில் வெளிவந்தவை. மேற்படி வரையறைக்குள் பாலம், புலம், ஈழகேசரி போன்றவற்றைக் கொள்ளலாம்.*
2. *இலக்கிய முயற்சிகளைக் குறைந்து புதிய கருத்தாக்கங்களினூடான பல சமூக ஆய்வுக்கட்டுரைகளை இலங்கை தமிழ் அரசியல் சித்தாந்தத் தளத்தில் முன்வைத்தவை. இவ்வகையில் உயிர்ப்பு எனும் சஞ்சிகை முக்கியத்துவம் வாய்ந்தது.*

படிப்பகம்

www.padippakam.com

3. தீவிர இலக்கியமுயற்சிகளோடு மாற்றுக் கருத்துகளுக்காகவும் அதிகாரத்துக்கெதிராகவும் குரல்கொடுத்த போதிலும் குறுகிய அளவிலான வாசகப்பரப்பையே கொண்டிருந்தவை. இவ்வகையில் தாகம். பனிமலர்... என்பவற்றைக் கருத்தில் கொள்ளலாம்.

இவைமட்டுமன்றி செய்திப் பத்திரிகை வடிவில் வெளிவந்த சிலவும் இங்கிலாந்தில் இருந்து வெளியிடப்பட்டன. "வெளி" எனும் பெயரில் ஓரிரு இதழ்கள் மட்டுமே வெளியான பத்திரிகை உள்ளடக்கத்தில் ஓர் சிறுசஞ்சிகைக்குரிய தன்மைகளை அதிகம் கொண்டிருந்தது. "வெளி" மாற்றுக்கருத்துகளுக்கு இடம் கொடுப்பதாக தன்னை அறிவித்துக் கொண்டாலும் பத்திரிகைச் சுதந்திரத்தின் பெயரால் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டதை கேள்விக்குள்ளாக்கும் எழுத்துகளுக்கு இடம் இல்லையென பகிரங்கமாக அறிவித்திருந்தது. மேலும் 1990-92 காலப் பகுதியில் வோல்த்தம் பொரஸ்ற் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட "அலை ஓசை" 8 இதழ்கள் வரைத் தொடர்ந்தது. படைப்புகளைப் பொறுத்தவரை தமிழர்கட்கேயுரிய மத, கலை பண்பாட்டுக் கூறுகளைப் பாதுகாப்பதையே நோக்காகக் கொண்டிருந்தன. இதன் ஆசிரியர்களாக பாலரவீந்திரன், க.ஜெயக்குமார் போன்றோர்களும் பிரான்சில்இருந்து கவிஞர் சு. கருணாநிதியும் இச்சஞ்சிகையின் வெளியீட்டுக்கு பங்களித்தோர்களாவார்.

இதுதவிர இங்கிலாந்து தமிழர்களிடையே ஆங்கில மொழியில் "தமிழ் ரைம்ஸ்" என்கின்ற செய்தியிதழ் இன்றுவரை வந்துகொண்டிருக்கின்றது. "புதினம்" எனும் பெயரிலும் விளம்பரப் பத்திரிகையொன்று லண்டனில் இருந்து வெளியானது. மேலும் தமிழர் நலம்புரிச் சங்கத்தின் (நியூஹாம்) சார்பில் அதன் 10வது ஆண்டின் நிறைவில் இருந்து ஆண்டுதோறும் வெளியிடப்படும் இலக்கிய மலரும் வந்து கொண்டிருக்கிறது. இவற்றில் "கிழக்கும் மேற்கும்", "இன்னுமொரு காலடி", "யுகம் மாறும்" என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

1.அ. ஈழகேசரி

ஆரம்பத்தில் இலங்கையில் பிரபல தமிழ்த் தினசரியான வீரகேசரியின் மாதிரியில் அச்சடிக்கப்பட்டு வெளிவந்த இப்பத்திரிகையானது ஈ.கே.ராஜகோபால் எனும் பத்திரிகையாளரால் வெளியிடப்பட்டது. சில காலங்களில் பின் சஞ்சிகையாக தன்னை ஈழகேசரி மாற்றிக்கொண்டாலும் புறவடிவத்தில் மட்டுமே ஓர் சஞ்சிகையாகவும் உள்ளடக்கத்தில் வெகுசனப் பத்திரிகைகளையும் மீறிய அசல் பல்சுவையிதழாகவுமே வெளிவந்துகொண்டிருக்கிறது.

1.ஆ.பாலம்

1996ன் இறுதிப்பகுதியில் லண்டனில் இருந்து ஒருதரமான இலக்கியப் பத்திரிகையைக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கோடு புலிகளின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகைதான் பாலம் என்பதாகும். முதல்மூன்று இதழ்களும் கஜனை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது. ஓரளவு தரமான விஷயங்களை வெளிக் கொணர்வதில் வெற்றி கண்டது என்று சொல்ல முடியாவிடினும் குறிப்பிடும்

படிப்பகம்

படியாய் செயற்பட்ட இச்சஞ்சிகையானது புகலிட நாடுகளின் வரலாற்று நிகழ்வுகள், புகலிட பிரச்சனைகள், சர்வதேச அரசியல், இலங்கையின் யுத்தநிலை போன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததோடு புலம்பெயர்ந்த தமிழ் அகதிகள் பற்றிய பயணக் குறிப்புகளையும் பதிவு முயற்சிகளாக மேற்கொண்டது. நான்காவது இதழ் வெளிவருவதற்குமுன்பே ஆசிரியர் கஜன் பாரிஸ் வீதியொன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து பாலத்தின் தொடர்ச்சியான வெளியீடு பாதிக்கப்பட்டது. அதன் பிறகு நீண்ட இடைவெளியின் பின்னர் ஓரிரு இதழ்கள் மட்டுமே வெளியிடப்பட்ட போதும் 1997உடன் அதன் வரவு நின்று போனது. பணவசதி மட்டுமே தரமான இலக்கிய சஞ்சிகை ஒன்றை வெளிக் கொண்டு வருவதற்கு போதுமானதல்ல என்பதற்கு பாலம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

நிகழ்காலப் பதிவுகள்

பிரான்சின் பாரிஸ் நகரில் 19.12.99 அன்று அன்று பின்நவீனத்துவம்: மாக்ஸிஸம் எனும் தலைப்பில் இடம் பெற்ற கலந்துரையாடலில் சுமார் 35-40 பேர் வரை கலந்து கொண்டனர். திரு எஸ். புஸ்பராஜா, தோழர் அழகிரி, அந்தோணிப்பிள்ளை ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுட்டுவிரல், அம்மா, எக்ஸில், புன்னகை போன்ற இதழ்கள் சார்ந்த இலக்கிய நண்பர்கள் கலந்து கொண்டனர். அதே வேளை (தமிழ் நாடு) தோழி மோனிகாவின் ஓவியக் கண்காட்சியும் இடம் பெற்றது. தமிழ் மொழியியல் துறையில் ஈடுபாடு கொண்ட தமிழ் பேசும் பிரான்சு நாட்டவர்கள் பலரும் அக்கறையுடன் கலந்து கொண்டனர். கலந்துரையாடலைத் தொடக்கி வைத்து பேசிய தோழர் அ. மார்க்ஸ் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருந்தார்.

1. இ.புலம்

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் "அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன"மான ஐ.பி.சி. (இது இலங்கைத் தமிழர்களால் நடத்தப்படும் தமிழ் ஒலிபரப்பு சேவை) எனும் நிறுவனத்தின் சார்பில் வெளிவந்த புலம் எனும் இதழ் இலக்கிய சஞ்சிகைகளுக்குரிய 'சில'விடயதானங்களைச் சுமந்திருந்தாலும் மூன்றிலொரு பகுதிப் பக்கங்கள் விளம்பரங்களுக்காக வண்ணவண்ண நிறங்களால் அலங்கரிக்கப்பட்டமையைத் தவிர குறிப்பிடும்படியாய் வேறொன்றும் இல்லையென்று கூறிவிடலாமா...? தெரியவில்லை. மற்றும் ஐ.பி.சி. வானொலியின் அறிவிப்பாளர் ஊழியர்கள் போன்றோர்களின் விபரங்களடங்கிய குறிப்புகள் என்றும் மேலும் பல பக்கங்கள் போய்விட இவ்விதழின் ஆசிரியராகச் செயற்பட்ட "புதுசு ரவி" தாய்நாடு பற்றி அவ்வப்போது எழுதும் நினைவுக்குறிப்புகளே காணக் கிடைக்கின்றன.

படைப்பிலக்கிய முயற்சிகளைப் பொறுத்தவரை சோலைக்கிளி போன்ற சில கவிஞர்களின் இலங்கையிலிருந்து பெற்று பிரசுரித்த சில கவிதைகளைத் தவிர புகலிடத்தில் இருந்து ஓரிரு கதைகள் மட்டுமே எட்டிப்பார்த்தன. இந்தப்புலமும் 10 இதழ்களைத் தாண்டாத நிலையில் அண்மையில் ஐ.பி.சி உடைந்து ரி.பி.சி. ஆக இன்னுமொரு ஒலிபரப்பு தொடங்கியதோடு நின்றுபோயிற்று.

மேற்குறித்த மூன்று இதழ்களும் நிதியுதவியைப் பொறுத்தவகையில் தனிநபர்களையோ, நண்பர்கள் வட்டத்தினரையோ மட்டும் சார்ந்திராமல் பாரிய வியாபார நிறுவனம், சங்கம், இயக்கம் என்பன போன்ற ஏதோவொன்றின் அனுசரணையுடன் வெளிவந்ததோடு பெருந்தொகையில் அச்சாகின. எவ்வித மாற்றுக்கருத்துகளுக்கான இடமோ, தத்துவார்த்த விடயங்கள் பற்றிய அக்கறையோ அற்று மரபார்ந்த போக்கில் தம்மை இனம் காட்டின. அத்தோடு தமிழ்த் தேசியவாதத் தளத்தில் நின்று கண்மூடித்தனமாகவும் உறுதியாகவும் தமிழ்த் தேசியத்தை ஆதரித்துச் செயல்பட்டன.

இவ்வகைப் போக்குகளில் இருந்து மாறுபட்டு நின்ற பலர் புலம்பெயர் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவர்களாய் இருந்தபோதும் மேற்படி இதழ்களில் இருந்து விலகிநின்றதுவும் அல்லது விலக்கி நிறுத்தப்பட்டதுவும் இச்சஞ்சிகைகளின் தோல்விக்கு பாதிக்கு மேற்பட்ட காரணங்களைத் தந்தன.

...தொடரும்

○

இவ்வாறாக

வெளியை மறித்து
வீடுகள் கட்டிக் கொண்டோம்
புறம்போக் கென்று ஒதுக்கியது
போக மீதத்தை அபகரித்துக் கொண்டோம்
ஓடும் நீருக்கும்
ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டோம்
காற்றை மாசுபடுத்த
கற்றுக் கொண்டோம்
நெருப்பை வயிற்றிலும் உடம்பிலும்
நெஞ்சிலும் குடிவைத்துக் கொண்டோம்
இன்னுமென்ன நாகரிகம் பண்பாடு
இப்படி வார்த்தைகளை அகராதியில் புதைத்துவிட்டோம்.

-விக்ரமாதித்யன் நம்பி

○

www.padippakam.com

இது ஒரு திரைப்பட விமர்சனம் (மட்டும்) அல்ல...

-கா. இளம்பரிதி

'இது வரவு வைக்கப்படாத இரத்தம் கணக்கில் வராத வரலாறு' என இயக்குநரின் வார்த்தைகளோடு திரைப்படம் முடிவடைகிறது. வாட்டாக்குடி கிளி சோதிடக்காரனுக்கும், அவனது கிளிக்கும் தொடர்ந்து ஊருக்கும், உறவுகளுக்கும் உணர்வெல்லாம் அவனை உழுது விதைத்திருக்கும் அவனது காதலிக்கும் (மாமன் மகள்) (மிகச் சாதாரணமாகவே அறிமுகமாகும் "இரணியன்", மேற்சட்டை இல்லாமல், கக்கத்தில் (கை இடுக்கில்) துண்டு இடுக்கி, முதுகு வளையக் கும்பிட்டு, தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில் விருந்துக்குக் கூடியிருக்கும் கீழ்சாதி மக்களைத் தோளில் துண்டு போடவும், காலில் செருப்பு அணியவும் அறிவுறுத்தி வீட்டுக்குள் அழைத்து வந்து (சமபந்தி) விருந்து வைக்கும் போதுதான் நமக்கு (நாயகனாக) அறிமுகமாகிறான்.

தோளில் துண்டும், காலில் செருப்பும் அணிந்து ஆண்டைக்கு முன்னால் வந்த குற்றத்திற்காக, ஆண்டையின் கொலைக்களத்தில் ஒரு கீழ்சாதி என்றழைக்கப்படும் மகனுக்கு சாணிப்பாலும், சவுக்கடியும், தண்டனையாக நிறைவேற்றப்படும் காலமும், காட்சியும், குலைநடுங்கும் பதற்றத்தோடு செயலொடுங்கி, ஆண்டையின் முன் மண்டியிட்டுக் கிடக்கும் அந்த மக்களின் அடிமை வரலாற்றை ஆயிரமாயிரம் வார்த்தைகளால் எழுதினாலும் தந்து விடாத துயரத்தை மனித நேயமுள்ள எந்தவொரு மனிதனுக்கும் ஏற்படுத்தி விடுகிறது. ஆண்டையும், அடிமைகளும், துரோகிகளும் கூடியிருக்கும் கொலைக்களத்திலேயே இந்த மாபெரும் மனித ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்பி ஆண்டையை முகத்துக்கு நேரே எச்சரிக்கும் தருணத்தில் வியப்புக்குரிய ஒரே மனிதனாக ஆண்டைக்கு இரணியன் அறிமுகமாகிறான். மீண்டும் நமக்கும்.

சாணிப்பாலும், சவுக்கடியும் தரப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்ட அந்த கீழ்சாதி மனிதனுக்காகத் தோண்டப்பட்ட புதைகுழி வீறுகொண்டு எழப்போகும் ஒரு வரலாறுக்காகத் தூவப்படும் ஒரு விதைக்கானது என்பதை புரிந்து கொள்ளாத ஆண்டையின் மூத்த மகன், "ஒரு கீழ்சாதிப்பய செத்தா அது எங்களுக்கு ஒரு மாடு செத்ததுக்கு சமம். செத்த மாடும், நத்தையும் தின்னு உயிர்வாழும் இவனுகளுக்காக (கீழ்ச்சாதி மக்கள்) இனி பேச நினைச்சா உனக்கும் ஒரு புதைகுழி காத்திருக்கும்" என இரணியனை எச்சரிக்கை செய்கிறான். இரணியனுக்குள் நெருப்பு கொழுந்து விட்டெரிகிறது. விடுதலை வேட்கை கொண்ட ஒவ்வொருவருக்குள்ளும்.

ஆண்டையைப் பகைத்துக் கொண்டதால், குத்தகைதாரர்களாக நடுத்தர

படிப்பகம்

www.padippakam.com

வர்க்க வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த இரணியனின் குடும்பம் அந்த உரிமையை இழக்கிறது. காதலியோடு (மாமன் மகள்) நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆண்டையால் தடுத்து நிறுத்தப்படுகிறது. இரணியனுக்கு இவை இழப்புகள் அல்ல. "குத்தகைகாரனாக, ஊருக்குள் வெள்ளையுஞ் சொள்ளையுமாக உடுத்திக் கொண்டு (அற்ப) மரியாதையோடு வலம் வந்த நான் இனி கூலி வேலை செய்து பிழைக்கனுமா?" என ஆதங்கப்படும் தன் தகப்பனிடம், சுரண்டிக் கொடுத்து அதிகாரத்தில் வீற்றிருக்கும் ஆண்டைக்கு எதிராக வாளெடுக்கப் போவதாகத் தான் தேர்வு செய்திருக்கும் வேலையை - கடமையை உரத்துச் சொல்லும் இரணியனுக்கு ஆண்டையிடம் கூனிக் குறுகிக் கிடைக்க வேண்டிய அற்ப வாழ்வு பறிபோவதில் வருத்தம் இருக்க முடியாது. ஆனால் அவனுக்காக நேரெதிரான வேறொரு வாழ்க்கை காத்துக் கிடக்கிறது. இரணியன் தருணம் பார்த்துக் காத்திருக்கிறான். அவனோடு நாமும்.

தன் மாட்டு வண்டிக்கு எதிரில் தவிர்க்கவியலாமல் வர நேர்ந்து விட்ட ஒரு கீழ்சாதிக்காரனின் மாட்டு வண்டியின் அச்சாணியைக் கழற்றி எறியப்போகும் ஆண்டையின் மூத்த மகனுக்கு, அந்த "அச்சாணியே" கொலைக்கருவியாய் தன் மீது இறங்கப் போகிறது என உணர்ந்து கொள்ளும் அவகாசம் கூடத் தரப்படாமல், "தண்டனை கொடுத்தே பழக்கப்பட்ட ஆண்டை வர்க்கத்திற்கு தண்டணை தரும் புதிய அத்தியாயமாக" இரணியன் தண்டனை வழங்கும் அந்த நிகழ்வு அவனது போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி விடுகிறது. மேலும் போராளி ஆயுதபாணியாக இருக்க வேண்டிய அவசியம் இரணியனுக்கு உறைக்கிறது. நமக்கும்.

ஒடுக்குபவனுக்கும், போராடுபவனுக்கும் இடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் இறுதிக் கணத்தில் முதலில் ஆயுதத்தைக் கையிலெடுப்பது, எதிரியின் ஆயுதத்தைப் பறிமுதல் செய்வது, கிடைத்த ஆயுதத்தை முதலில் பிரயோகிப்பது எனப் பல்வேறு (செயல்தந்திர) போர்த்தந்திரங்கள் கையாளப்பட வேண்டியுள்ளது. ஆண்டைகள் (ஆளும் வர்க்கம்) ஆயுதபாணியாகக் கோலாச்சிக் கொண்டிருக்கும் பொழுது இரணியன்களை நிராயுதபாணிகளாய் எதிர்பார்ப்பது நியாயமில்லை. ஆனாலும், ஆயுதங்கள் போராட்டங்களைத் தீர்மானிப்பதில்லை. இருந்தும் போராட்டங்கள் ஆயுதங்களைத் தீர்மானிக்கின்றன. சில நேரங்களில் போராட்டக்களங்களும், சூழலும் கூட, "அச்சாணி" இரணியன் கையில் ஆயுதமாகப் பரிணமித்த காலமும் இடமும் இத்தகையதே.

"எனக்கு பிறந்திருந்தா இவன் இப்படி செத்திருக்க மாட்டான்". என்று அடக்க ஒடுக்கமான தன் மனைவியிடம் ஆத்திரப்படும் ஆண்டைக்கு தன் மகன் கொல்லப்பட்ட சோகத்தை விட, மற்றவர்களைக் கொலை செய்தே பழக்கப்பட்ட ஆண்டை வம்சத்தில் அதிர்ச்சியூட்டும் கொலை பரிகாரமாய், தன் வாரிசு ஆக்கப்பட்ட, எதிர் வரலாறு எழுதப்படும் அவலம் நேர்ந்து விட்ட ஆதங்கமே எஞ்சி நிற்கிறது "ஒரு கீழ்ச்சாதிப் பய செத்தா ஆண்டைக்கு ஒரு மாடு செத்த

படிப்பகம்

www.padippakam.com

மாதிரி" என அகங்காரம் பேசிய ஒரு ஆண்டையின் சாவில் அவன் வர்க்கம் ஒடுங்கிவிடுமா, என்ன? அகங்காரம் ஆங்காரமாய் கிளறிவிடப்படுகிறது. இரணியன் குடும்பம் காவல் துறையின் துணையோடு கொடுமைப்படுத்தப்படுகிறது. இரணியன் காதலி அவமானப்படுத்தப்படுகிறாள். அவனது தந்தை கொடும் சித்திரவதைக் குள்ளாக்கி கொல்லப்படுகிறார். கொலை ஆண்டைகளின் (ஆளும் வர்க்கத்தின்) குலத்தொழில். கொலைக்கு கொலை அவர்களுக்கு கைவந்த கலை. ஆனால் இரணியனுக்குத் தொழில் மக்களின் விடுதலைக்கு உழைத்தல். இழப்புகள் இரணியனை மேன்மேலும் அர்ப்பணிக்கத் தூண்டுகின்றன. களத்தில் பங்கெடுக்கும் தோழர்களும், விடுதலையை நேசிக்கும் மக்களும் தோள் கொடுக்கிறார்கள்.

இரணியன் தந்தையின் இறப்பைப் பறையறைந்து "சாவு சேதி" சொல்லியும், ஆண்டைக்குப் பயந்து பிணம் தூக்க மறுத்து ஒதுங்கும் கீழ்ச்சாதி மக்களிடம் நியாயம் பேசியும், காதலனின் தந்தை பிணத்திற்கு (ஒரு பெண்ணாயிருந்து(ம்)) எரியூட்டியும் இரணியனின் காதலி ஆற்றும் குறிப்பிடத்தகுந்த சமூகப்பாத்திரம் சாதாரணப் படிமங்களாக நம்மைக் கடந்து போகின்றன. பறையடித்தல், மக்களைத் திரட்டி நியாயம் பேசுதல், சிதைக்குத் தீவைத்தல், என ஆணாதிக்க மரபுகளைச் சூழலின் நெருக்கடியில் இலகுவாக மீறிய ஒரு பெண்ணின் உருவகமாக இரணியனின் காதலி காட்சிப் படிமமாக நமக்குள் உறையும் போது வர்க்கப் போராட்டத்தின் உள்ளுறையாக பெண் விடுதலை பெண்ணுரிமைப் போராட்டம் பதிவுறும் என நமக்குப் புரிகிறது. ஆனாலும் பறையடிக்க மறுத்த புலையனின் கட்டை விரலைத் துண்டாக்கிய ஆதிக்க சாதியும், கணவனின் எரிசிதையில் உடன்கட்டை ஏற்றிய ஆணாதிக்க "சதிமாதா" கொடுமையும் நிலப்பிரபுத்துவ எச்சங்களாக நிலவி வரும் இன்றைய சமூகத்துக்குச் சற்றே முந்தைய கால சமூக விடுதலை - சம உரிமைப் போராட்ட வரலாற்றில் பெண்ணுரிமை காவு கேட்ட இழப்புகளும், அர்ப்பணிப்பும் போதிய அளவில் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் உணர்த்துகிறது.

ஆண்டையாலும், அரசாலும் தேடப்படும் குற்றவாளியாக இருக்கும் இரணியன் தந்தையின் இறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குற்றத்திற்காக ஆண்டையின் நிலங்களில் கூலி வேலைக்கும் கால் வைக்கக் கூடாதென அந்த உழைக்கும் மக்கள் விரட்டியடிக்கப்பட, அக்கூலி விவசாயிகளின் உரிமைப் போராட்டத்திற்கு வடிவம் கொடுக்க முடிவெடுக்கும் இரணியன். "நாம் எடுக்க வேண்டிய ஆயுதத்தை ஆண்டை தீர்மானித்து விட்டான்" என "கதிர் அரிவாளோடு" அம்மக்களை களமிறக்க, இரவோடு இரவாக ஆண்டையின் வயல்களில் அறுவடை முடிந்து விடுகிறது. இம்முறை மக்கள் ஆயுதபாணியாகிறார்கள். மீண்டும் தனக்கெதிரான ஆயுதத்தைத் தீர்மானித்தவன் ஆண்டையே. ஆனால், அறுவடை செய்யப்பட்டது ஆண்டையின் உயிரல்ல உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கும் போராட்டத்தில், நிலத்தை உழுதவர்கள் தாங்கள் விதைத்த உழைப்பை அறுவடை செய்து கொள்ளும் இடைக்கட்டப் பகுதியே இது என்பது நம்மைவிட ஆண்டைக்கு வெகுவாகவே புரிகிறது.

ஆண்டையின் எதிர்ப்புணர்வை அறுவடை செய்த மக்கள் மீது அவனது ஏவல் நாய்கள் (மனித மிருகங்கள்) கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அறுவடை

படிப்பகம்

செய்யப்பட்ட கதிர்கள், காரை மெழுகி கூரை வேயப்பட்ட குடிசைகள், ஒட்டுத்துணிகள் தட்டுமுட்டு சாமான்கள் என மீதமிருக்கும் வாழ்க்கையின் ஆதாரங்களும், ஏவல் நாய்களால் தீக்கிரையாக்கப்பட, இன்னுமொரு "வெண்மணி நிகழப்போகிறதோ என நாம் பதைத்திருக்கும் நேரத்தில் இரணியன் தன் உயிரைப் பணயம் வைத்து, மக்களை தாக்க அந்நாய்களோடு பெரும் போராட்டம் நடத்த வேண்டியதிருக்கிறது. ஆனால் இங்கு நிராயுதபாணியான மக்களை ஆயுதபாணியாக இரணியன் காப்பாற்றும் செயல்தந்திரம் நிறைவேறுகிறது. எதிரிகள் (ஆளும் வர்க்கம்) எப்பொழுதும் ஆயுதபாணிகளே.

இடையில் இரணியனுக்குத் தன் மானசீகக் காதலியோடு இரகசியத் திருமணமும், உடல் உறவும் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்து விடுகிறது. நிறைமாதக் கர்ப்பிணியாக, பிறக்கப் போகும் குழந்தையின் பாதுகாப்புக்காகத் தன் மறைவிட இருப்பிடம் தேடி வரும் மனைவியிடம், "நீ நாளைக்குப் பிறக்கப்போற ஒரு குழந்தையை பத்தி கவலைப்படுற. நான் காலகாலமா வாழ்க்கைய இழந்து தவிக்கும் ஒரு வர்க்கத்தைப் பத்திக் கவலைப்படுறேன்" என்று இரணியன் தன் குணத்தை வலியுறுத்தி நிறுவும்போது புரட்சிகர நம்பிக்கை அடிமைப்பட்ட அந்த மக்களுக்குள் துளிர்விடுகிறது. ஆனால் துளிர்விடும் அந்த நம்பிக்கை அடிமைப்பட்ட அந்த மக்களுக்குள் வளர்ந்து விடாமலிருக்க, ஆண்டையின் ஒடுக்குமுறையும் அழித்தொழிப்பும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. பார்வையாளர்களாய் மட்டும் நாம்.

இழப்புகளை எதிரிக்குத் தொடர்ந்து ஏற்படுத்துவதும், உணர வைப்பதுமே ஒரு போராளிக்குக் களத்தின் வெற்றியில் கால இலக்குகளைத் தீர்மானம் செய்ய, மிக அவசியமான செயல்திட்டமாக இருக்க முடியும். இரணியனும் இதில் விதிவிலக்கல்ல. மன்னர் மானியம் ஒழிக்கப்பட்ட பின்பும் பழைய அரசஆண்டை பரம்பரையின் கழிசடை வாரிசுகளும், சுரண்டலின் - ஒடுக்குமுறையின் நிலப்பிரபுத்துவக் கற்சித்திரங்களாக இன்னும் பாதுகாக்கப்பட்டு வரும் அரண்மனைகளும், பார்ப்பனிய இந்து வகுப்புவாதிகளும் இன்றைக்கும் கொண்டாடிவரும் ராம்லீலா - தசரா விழா - இராவண உருவ பொம்மை எரிப்பு போன்றதொரு நிகழ்வு வாட்டாக்குடியிலும் சித்தரிக்கப்படுகிறது. இந்நிகழ்வில் ஆண்டையின் கடைக் கழிசடை வாரிசைக் கடத்திச் சென்று, இராவண உருவ பொம்மைக்குள் இரணியன் ஒளித்து வைக்க, உயிருள்ள கொடும்பாவியாய் ஆண்டையின் கையாலேயே அவன் வாரிசு தீயிட்டுக் கொளுத்தப்படுகிறான். ஆண்டையால் கொளுத்தப்பட்ட உழைக்கும் மக்கள் உயிரும், உடமைகளும் நம் கண்முன் நிழலாடுகின்றன.

உயிரோ, உடமையோ மக்கள் எதிர்கொள்ளும் இழப்புகள் எதுவானாலும் அதே வடிவத்தில் ஆளும் வர்க்கத்திற்குப் பதிலடி தரப்படும்பொழுது அவர்களின் கொலை வெறி இன்னும் உச்சத்திற்கு செல்கிறது. தன் வாரிசு, உடைமை நிர்மூலமாக்கப்பட்ட உச்சவெறி ஆண்டைக்குள் கோரத் தாண்டவமாடுகிறது. ஊர்த் திருவிழாவில் பரிமாறப்படும் கஞ்சியில் ஆள்கொல்லிநஞ்சு கலந்து பசித்திருக்கும் மக்களைத் துடிக்கத் துடிக்கக் கொல்லும் அளவிற்கு ஆண்டையும்

www.padippakam.com

அவன் கைக்கூலியும் இரக்கமற்றக் கொடும்பாவிகளாய் விசுவரூபம் எடுக்கின்றனர். அப்பனும், ஆத்தாளும், உடன் பிறந்தவர்களும், குழந்தை குட்டிகளுமாய் கண்களுக்கு முன்னால் சருகாய் செத்துக் கிடக்க, எஞ்சிய மனித உயிர்களுக்குள் வார்த்தைகளால் அளவிட முடியாத பிரளயம் ஏற்படும் என நாம் எண்ணியிருக்க, அவர்களோ அஞ்சி நடுங்கும் ஒடுக்கத்திற்கு ஆளாகிறார்கள். உயிர் பிழைக்கும் நெருக்குதலில் இரணியனை அவன் போராட்டத்தை அவன் வேண்டுகோளைப் புறக்கணித்து ஊரை விட்டே புலம் பெயரும் அந்த உழைக்கும் மக்களின் செயல் இரணியனை மட்டுமல்ல, நம்மையும் கேள்விக்குள்ளாக்குகிறது. தத்துவ வழிகாட்டலும், அரசியல் நெறிப்படுத்தலும், மக்களும் பங்கெடுக்கும் போராட்ட செயல்திட்டங்களும் முன்வைக்கப்படாத எந்தவொரு தனி மனித சாகசமும் மக்களுக்கான போராட்டமே ஆயினும் மக்களின் புறக்கணிப்புக்கு உள்ளாக நேரும் என்பது இரணியனுக்கு மட்டுமல்ல, நமக்கும் போராட்ட அனுபவங்களே.

அதிர்ச்சி தரும் நிகழ்வுதான் எனினும் எதிர்ப்புணர்வு மழுங்கடிக்கப்பட்டு, சுரண்டலும் ஒடுக்குமுறையும் நுகத்தடிகளாய் அழுந்த அடிமை சனங்களாய் வாழ்ந்த வாழும் அந்த உழைக்கும் மக்களின் அறியாமையும், குமுறும் மன இறுக்கமும் தான் நமக்காகப் போராடிய - அர்ப்பணித்த - இழப்புகளை நெஞ்சுறுதியோடு ஏற்றுக் கொண்ட ஒரு போராளியை - நடுத்தெருவில் கல்வீசித் தாக்கிக் கொல்லவும் துணிந்து - நாம்எதிர்பாராத - எதிர்வினைக்குக் காரணிகளாய் இருக்கினறன. ஒரு போராளியாய் இரணியனும் அறிந்திருக்கும் மக்கள் உளவியல் இது. குற்றுயிராய்த் தாக்கப்பட்ட நிலையிலும் மக்களின் ஒற்றுமைக்கும், போராட்ட உணர்வுக்கும் அறைகூவல் விடுக்கும் இரணியன் "இந்த மக்களிடம் இழப்பதற்கு எதுவுமில்லை. அதனால் என்னை இழக்கிறேன். என்னைப் போல ஆயிரம் இரணியன்களை இந்த மக்கள் உருவாக்குவார்கள். ஆனால் இவர்கள் பெறுவதற்கோ ஒரு பொதுவுடைமைப் பொன்னுலகம் காத்திருக்கிறது." எனப் புரட்சியின் முன்னறிவிப்பாய் முழங்கி, அதன் நெடிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இருந்தும் இன்னும் வாழ்கிறான். "நீ செத்தால் பிணம் நான் செத்தால் வரலாறு" என ஆண்டையின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு நெஞ்சுயர்த்தி, தன் கடைசிக் கணத்திலும் கனலாய்த் தெறிக்கும் இரணியனின் மரணம், இன்றும் கொடி உயர்த்திப் போராடிவரும் அனைத்து உழைக்கும் மக்களின் நேர்செய்யப்படாத கணக்கில் வரவு வைக்கப்பட்ட வரலாறு.

"ஒரு இடதுசாரி என்பதற்காகவே சுதந்திரப் போராட்ட வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட ஓர் இலட்சிய போராளியின் உண்மைக் கதையே இரணியன் வரலாறு" என ஒரு பத்திரிக்கை நேர்காணலில் கருத்துரைத்த இயக்குனர் வின்சென்ட் செல்வா. ஒரு தமிழ்ப்படத்தின் தவிர்க்கவியலாத கதை உத்திகளோடு (கனவுப்பாடல்கள், தனி மனித சாகசம்) "இரணியன்" திரைப்படத்தைக் கதையாடல் **(Narrative)** செய்திருக்கிறார். ஒரு வணிக சினிமாவுக்கான இத்தகைய சமரசங்கள் இதுபோன்ற திரைப்படங்களில் கட்டமைப்பை சீர்குலைக்கின்றன. புரட்சியாளனின் கதையானாலும் காசு பண்ணும் சாமார்த்தியம் தமிழ் (இந்திய) சினிமா தயாரிப்பாளர்களுக்குக் கைவந்த கலை. இந்தக் கலை முதலாளிகளின்

படிப்பகம்

www.padippakam.com

கைமீறி புரட்சிகர முற்போக்கு வாடையோடு திரைப்படச்சுருள் தணிக்கை (Censor) யாளர்களின் அறைக்குள் நுழைந்து விட்டால், அவர்களின் ஆளும் வர்க்க விசுவாசத்தில் அந்த நெடி சுத்திகரிக்கப்பட்டு விடும். "வாட்டாக்குடி" தலைப்பே சுத்திகரிக்கப்பட, மீண்டு வந்த இரணியன் வாட்டாக்குடி மக்களை மட்டுமல்ல, நம்மையும் ஏமாற்றவில்லை.

மக்களின் அழுகுரல்களையும் மீறி, உயிரறும் தருவாயிலும் தன் இடதுசாரி அடையாளத்தை முழக்கமாய் விட்டுச் சென்ற இரணியனின் இறுதிக்கண வரிகள் நம் செவிகளில் எதிரொலிக்க, ஐந்து நிமிடங்களுக்கு மேல் நீளும் அழுத்தமான - அடர்வு மிகுந்த (Tight Close-up) மக்கள் சூழ்ந்த இரணியனின் அந்த மரணப்படுக்கைக் காட்சி மறக்கவியலாத படிமமாய் வாட்டாக்குடி மக்களுக்குள் மட்டுமல்ல, நமக்குள்ளும் பதிவாகிறது. தோளில் துண்டும், காலில் செருப்பும் அணிய விரும்பிய ஒடுக்கப்பட்ட (கீழ்ச்சாதி) தலித் மக்களின் சம உரிமைப் போராட்டமாய்க் கிளர்ந்த எதிர்ப்புக் பொறி, கூலிப் போராட்டமாய், இரணியனால் வளர்த்தெடுக்கப்பட்டு, பெருநெருப்பாகி வீசும் பொழுது, வர்க்கப் போராட்டாய் செஞ்சுடராய், போராடும் மக்களுக்கு வழிகாட்டுகிறது. மனித உரிமைகள், வாட்டாக்குடி உழைக்கும் மக்களுக்கு மட்டுமல்ல, பொதுவுடைமைப் பொன்னுலகம் காண விழைந்த தியாகிகளான எண்ணற்ற விடுதலைப் போராளிகளின் - இரணியன்களின் கனவை நனவாக்கும் செயலுக்கு உந்து சக்தியாக - ஜனநாயகக் கேடயமாக நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவக் கொட்டடியில் உழலும் அனைத்து மக்களுக்கும், நமக்கும்.

அசலான போராட்ட அனுபவத்தை ஒரு திரைப்படம் தந்துவிட முடியாதுதான். ஆனால் "இரணியன்" திரைபிம்பத்தில் அசலான திரைப்படம். பார்வையாளனாய் பங்குபெறும் யாருக்கும் அந்தப் போராட்ட அனுபவத்தின் துளிகளாவது ஒட்டிக் கொள்கிறது. காட்சிப் படிமமாய் நிழல்களே சில நேரங்களில் அசலாய் உருத்தரிக்கும் பொழுது. "நிழல்" செய்யப்பட்ட அசலான இரணியன் நம் நிழல்களையாவது தீண்டிவிடும் வலிமையோடுதான் (திரை) பிம்பமாக்கப்பட்டு இருக்கிறான். இரணியன் பெரும்பாலான காட்சிகளில் அணிந்து வரும் சிவப்புச் சட்டை. கனவுப் பாடல்களிலும், கனவுக் காட்சிகளிலும் பல தருணங்களில் கதாநாயகி உடுத்திவரும் சிவப்பு சேலை - சிவப்பு ரவிக்கை. இன்னும் சில கதாபாத்திரங்களின் சிவப்பு நிற உடைகள். கலெக்டரின் பழைய மாடல் சிவப்பு நிற கார் தோழர்களின் சமாதிகளில் பறக்கும் செங்கொடி என திரைப்படங்களின் காட்சிப் படிமங்களில் திட்டு திட்டய் விரவி நிற்கும் செஞ்சுடர் - சிவப்பு நிறம் நம்முள் ஒட்டிக் கொள்ளும் படிமத் துளிகளின் நிறமாகவும் இருப்பதில் வியப்பில்லை.

தியாகபூமி, கண் சிவந்தால் மண் சிவக்கும், ஏர்முனை, ஒரு இந்தியக் கனவு... திரைப்பட வரிசையில் "இரணியன்" இன்னுமொரு தரமான தமிழ்ப்படம். ஆனால் முதலாளித்துவப் பிரச்சார கண்காணிப்புச் சாதனங்களாக இருந்து கொண்டிருக்கும் மீடியாக்கள் ஒரு நாலாந்தர தமிழ் சினிமாவுக்குத் தரும் வரவேற்பையோ விளம்பரத்தையோ கூட இரணியனுக்குத் தரவில்லை. இன்றைய

படிப்பகம்

www.padippakam.com

நூஊர்வுங் கலாச்சார சமூகச் சந்ததியில் தரமானவை விலை போகாமல் இருக்கலாம். நாலை மறு தணிக்கை செய்யப்பட்டு மக்களுக்கான திரைப்படங்களாக - போராட்டங்களில் கருத்தியல் ஆயுதங்களாக, ஏனைய மக்கள் கலை வடிவங்களோடு "இரணியன்" போன்ற திரைப்படங்கள் மறு / புது வெளியீடு செய்யப்படும் / செய்யபபட வேலண்டும்.

○

மையம்

ஒரே ஒரு வாய்ப்புத்தான் மிச்சமிருந்தது
விழுந்த மரத்தை எடுத்து நடுவதற்கு
குழந்தையைக் கொஞ்சுவதற்கு
துயறுற்றுப்போன மனைவியைப் பிரிய
வியாபாரத்துடன் தந்திரம் பண்ண
வாழ்வற்ற இளம்பெண்ணிடம் பரிவு காட்ட
பசியால் நோயுற்று விட
நம்பிக்கையின் முகத்தில் காறியுமிழ
காட்டுக் கிழங்குகள் சுட்டுத்தின்ன
குறைந்த பட்சம் தற்கொலை செய்து கொள்ளவாவது

உதாரணத்திற்கு பிறந்தவர்களால்
நிறையும் பூமியில் ஒரே ஒரு
வாய்ப்புத்தான் மிச்சமிருக்கிறது
உழுது பயிர் செய்ய அல்லது ஏமாற்றிப் பிழைக்க
உற்பத்திப் பொருளிட்ட
அல்லது ஆட்களை வைத்து கொலை செய்ய

செருப்புத் தைப்பவனிடம் கேட்டேன்
இடதுபுறம் திரும்பி நேராகப் போகச்சொன்னான்
திரும்ப வலதுபுறம் காணாது திகைத்தேன்
நான் நிற்குமிடம் மையமானதுதானா

- யவனிகா ஸ்ரீராம்.

○

படிப்பகம்

இவர் ஒரு புரட்சிகர எழுத்தாளர்

- கடலை மாடசாமி

சு.சமுத்திரத்தின் "சோற்றுப்பட்டாளம்" படித்தபோது எனக்கு வயது 14. உண்மையில் அந்த நாளில் அவர் மிகப் பெரும் எழுத்தாளராகக் காட்சியளித்தார் எனக்கு. அதைத் தொடர்ந்து எங்கோ அவரது புகைப்படத்தைப் பார்த்த போது, உண்மையாகவே பெருமையாகவும் உவகையாகவும் இருந்தது. இவர்தான் நமக்கான எழுத்தாளராக இருக்க முடியும். மிகச் சரியாகத் தேர்ந்தெடுப்பதிலவல்லவர்களைக் கொண்ட சாகித்ய அகாடமி கோவி. மணிசேகரனுக்கு அளித்தது போலவே சு.சமுத்திரத்துக்கும் விருது தந்து தன்னை கௌரவித்துக் கொண்டது.

கடைசியாய் அவர் தமிழ் நாடு அரசின் ஏதோ ஒரு முக்கியத்துறையின் உயர் மட்டத்திலிருந்து ஓய்வு பெற்றார். அவரது கொடையாகி எய்ட்ஸ். இலக்கியம் இரண்டையும் ஒருசேர தீர்த்துக்கட்டும் முயற்சியாக வெளிவந்தது "பாலைப் புறா". அவர் தன்னளவில் ஆத்மார்த்தமான படைப்பாளி. சூரியனுக்குக்கீழ் (அத்தனை) அவலங்களையும் வேரறுக்கின்ற முயற்சியாளரான அவரை தமிழ்நாடு அரசு சாகுந்தண்டியும் ஏதாவதொரு பிஸியான பதவியில் வைத்திருக்க வேண்டாமா? ஓய்வளித்து விட்டது.

எய்ட்ஸ் போன்ற உலகளாவிய கேடு ஒன்றும் தற்சமயம் இல்லாததால் அன்னார் தனது "பஞ்சசான்யத்தை" முழக்கி சுதர்சனத்தை ஏவி. நாவல் சம்ஹாரம் செய்யவும், முடியாத நிலையில் தொடர்ந்து இலக்கியக் கூட்டங்களுக்கு வருகை தந்து "சட்டாம் பிள்ளை" பதவியை தானே கைப்பற்றுகிறார். கூட்டம் முடியும்மட்டும், முடிந்த பிறகும் கூட தான் மட்டுமே பேச வேண்டும் என நினைப்பது எவ்வகை இறுமாப்பு. உலகம் மூன்று பங்கு கடலாலும் ஒரு பங்கு நிலத்தாலும் உருவானது. சமுத்திரம் 100 சதவீதமுமே கடலாக-சமுத்திரமாக இருக்க வேண்டும் என நினைப்பார் போலும். இந்த அராஜகத்தை நான் திருப்பூரில் இரு கண் இரு காது கொண்டு உணர்ந்தேன்.

உலகில் கால்பகுதி நிலமாவது மிஞ்சட்டும் என நினைக்கிற எந்த (இலக்கிய) அமைப்பும் அன்னாரை அழைக்காமலிருப்பது மற்ற பார்வையாளர்களுக்கு நல்லது. சதங்கை கட்டி ஆடுகிற துடியான சாமியார்தான் அடக்குவது தெக்கத்திக் கூட்டங்களில் நடப்பது போல் எதிர்த்துச் சத்தமிடலாம் எனில் அவரது வயது, செல்வாக்கு, அபரிமிதமான அறிவு ஆகியவை தடைப்படுத்துகின்றன.

சென்னையில் சிலம்பம் ஏற்பாடு செய்த (இதை எழுதுவதற்கு சிலநாட்கள் முன்பு - நவம்பர் 13.14ல்) தமிழில் பின் நவீனத்துவ எழுத்து கருத்தரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வு குறிப்பிடத்தக்கது பாமா, கோணங்கி, சாருநிவேதிதா, குமார செல்வா இவர்கள் நால்வரும் தன்னனுபவம் பகிர்கிற ஓர் அமர்வுக்கு தலைமை சு.சமுத்திரம். இந்த மில்லியனியத்தின் பெரிய ஜோக்கை தாமே

நிகழ்த்துவது என் இல்க்கிய அமைப்புகள் முடிவு செய்து விட்டால் என்ன செய்வது. பேச்சினிடையில் குமார செல்வா சு.சமுத்திரம் (இன்னும் சிலர்) போலி என்று சொல்லி விட்டார். கொதித் தெழுந்த சமுத்திரத்தின் ஆதங்கத்தில் நியாயமுண்டு. தான் போலி அல்ல என கர்ஜித்தார். அது உண்மை. அந்தளை பெரிய ஆழியில் கலையின் கடற்பாசிகளும் நீந்தும் ஜீவராசிகளும் இருந்திருக்கலாம். உப்புத் தண்ணீரை மட்டுமே கொண்டிருந்தாலும் கடல் கடல்தானே. நெகிழ்ச்சியான முறையில் குமாரசெல்வா மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். பேச்சு என் வாழ்வியல் அம்சத்தில் ஒன்று எனக் குறிப்பிட்ட அவர் சமுத்திரத்தைப்பார்த்து நீங்கள் என் தகப்பனாரைப் போல என்றார். இதைச் சொல்லி முடித்து அமரச்சென்ற குமார செல்வாவிடம் சு.சமுத்திரம் "என் எழுத்து சர்வீஸ் கிடையாது உங்க வயசு" என்றார்.

மக்களை முன்னேற்றுகின்ற கருணைக்கடலே உங்கள் முன் நாங்கள் என்றென்றும் தர்க்கம் பண்ண முடியாது. இப்போதைய உங்கள் வயதை நாங்கள் அடைகிறபோதும் நீங்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். அப்போதும் உங்கள் "சர்வீஸ்" எங்களை மிஞ்சியதாக இருக்கும். உங்கள் "சர்வீஸைப்" பெறுகிற தமிழ் மக்கள் உங்கள் எழுத்து விரும்புகிற சமுதாயத்தை அமைப்பார்கள். அன்றைக்கு எல்லோரும் படகில் பயணித்து வாழ்வார்கள். விளைச்சலுக்கென்று கைப்பிடி நிலமும் இருக்காது.

O

பிரபஞ்சம் ஓர் அறிமுகம்

- பாலை நிலவன்

1. நான் தூக்கிக் கொஞ்சுகிறேன்
அர்த்தங்களையும்
தன் மொழி பற்றிய பிரஞையையும்
கண்டடையாத ஒரு மழலையை
உள்ளபடி
இந்த நிமிடத்தில்
நான் கானகன்
அல்லது
குறியீடற்ற ஒரு உலகத்தின் பிரஜை.
2. பெயரல்லாத வனத் தேசத்தில்
இம் மழலை என்னை எப்படி அழைத்தால் என்ன...
ஆயினும்
சட்டையைப் பிடித்து நிறுத்தி
நான் கானகன் வனத்தேசன் என்று
அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது
உங்களுக்கும் அவர்களுக்கும்.

www.padippakam.com

(செம்மலர் டிசம்பர் 1999 இதழில் 'விஸ்வ கர்மா' எழுதிய பின் நவீனத்துவக் கருத்தரங்கு- அடுக்கு குலைந்த நூலகம் செய்திக்கட்டுரைக்கான எதிர் வினையாக 18-12-99 அன்று செம்மலருக்கு கூரியரில் அனுப்பப்பட்ட கடித நகல்.)

மூத்தோ(ழ)ரும் விட(வில்)லையும்

அன்புடன் ஆசிரியத் தோழமைக்கு,

டிசம்பர் செம்மலரில் விஸ்வகர்மா(இப்படி ஒரு பெயரா? தமிழில் ஆசாரி-தானே?)வின் "பின் நவீனத்துவக் கருத்தரங்கம்: அடுக்கு குலைந்த நூலகம்" செய்திக் கட்டுரை படித்தேன்.

நிறுவனமாகிப் போவதை (அமைப்பாவதை அணி திரள்வதை) எதிர்க்கும் பின் நவீனத்துவம் கருத்தோட்ட வழியில் அணிதிரள்வதையும், அமைப்பாவதையும், வருங்காலத்தில் நிறுவனமாவதற்கான வாய்ப்புகள் உள்ளதையும், நிறுவனமாகிப் போவதையும், பின் அதிலும்கூட எதிர்த்துக் கிளர்ந்து, அணியாகி, அமைப்பாகி நிறுவனமாகப் பின் அதிலும்... என இதிலுள்ள இயங்கியலை (மாற்றம் மட்டுமே மாறாதது) நாம் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்தரங்கை ஒருங்கிணைத்தது ஒரு நிறுவனம் என்பதையும், பின் நவீனத்துவக் கலந்துரையாடல்களையும், கருத்தரங்கங்களையும் நடத்துவதற்கென்றே தென்தமிழ் நாட்டில் சில அமைப்புகள் இருப்பதையும் நாம் கண்ணுற வேண்டும்.

செய்திக் கட்டுரையில் உள்ளது போல் முன்னர் மார்க்ஸியவாதிகள் சிலர் இந்தத் தவறைச் செய்ததுண்டு. இப்போது பின் நவீனத்துவ வாதிகள் பிடித்துக் கொண்டார்கள். ஆனால், இது ஒரு தவறா என்பதிலே கூட நமக்குக் குழப்பமே.

ரஷ்ய இலக்கியங்கள் தவிர பிறவெளியக இலக்கியங்கள் பற்றிப் பேசாத நாம், இப்போது (ச. தமிழ்ச் செல்வனின் ஸ்பானியச் சிறகின் பின்னர்) லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் பற்றியும் பேசப் புகுந்துள்ளோம்.

சனாதன தர்மம் (இந்து மத ஒழுக்கம்) பற்றிப் பேசாத நாம் பாரதிய சனதாவின் அரசியல் வளர்ச்சி ஜயமோகனின் விஷ்ணுபுரத்தின் வழியிலான எழுத்துலக மறு எழுச்சியின் பின் சனாதன தர்மம் பற்றியும் மனு தர்மம் பற்றியும் ஆதிசங்கரரின் மறுவடிவம் ஜெய மோகன் என்றும் (மதுரை

படிப்பகம்

மாவட்ட இரண்டாம மாநாடு எட்வர்டு மன்றம், மதுரை-மதுக்கூர் ராமலிங்கம் உரை வீச்சு "இலக்கு", "இயம்") பேசத் தொடங்கி உள்ளோம்.

அமைப்பியல், நவீனத்துவம், மாயா நடப்பியல் எல்லாம் புத்தி பேதலிப்பு எனத் தெளிவு கொண்ட நாம் (திருப்பரங்குன்றம் மாநில மாநாடு - கேரள எழுத்தாளத் தோழரின் - அறிதலின் அவசியம் தொடக்க உரையின் பின்) இன்று பின் நவீனத்துவம் வரை பேசுகின்றோம். பின் நவீனத்துவம் கருத்தரங்கில் கட்டுரை படிக்கின்றோம். செய்திக் கட்டுரை போடுகின்றோம். இதோபார் அன்றே ஒரு "மேஜிகல் ரியலிஸ்க் கதை" என்று ஒரு பழைய கதையை எடுத்து செம்மலரில் (செருப்பில் குடியிருக்கும் கதை) வெளியிடுகின்றோம். மகிழ்ச்சியடைகின்றோம்.

மொழி என்பது தொடர்பிற்கான ஒரு சாதனம்தான் (Sign-குறி) எனப் பேசி வந்த நாம், இன்று தமிழ் வழிக் கல்வி என்கிறோம். தமிழ் வளர்ச்சிக் கருத்தரங்கம் நடத்துகின்றோம். "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என ஆங்கிலம் கலந்த தமிழில் ஆவேசப்படுகிறோம்.

பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகளாய் கூலித் தொழிலாளர்களும் விவசாயக் கூலிகளும் இருந்த நிலை மாறி, மாதம் ரூ. 5,000 முதல் 30,000 வரை ஊதியம் பெறும் வெள்ளுடைப் பணியாளர்களுக்காக (கல்லூரி, பள்ளி, காப்பீடு, வங்கி, தொலைபேசி) தொழிற் சங்கங்கள் நடத்துகின்றோம்.

தொழிற்சங்கமே இல்லாமல் நடக்கின்ற தொழிற்சாலையின் வாசலுக்குக் கூட்டமாகச் செல்கின்றோம். நன்கொடை வாங்குவதற்காக.

இந்திரா காங்கிரஸ் வலுவுடனிருந்தபோது அதன் இரட்டை நாக்குத் தன்மை பற்றி பேசினோம். (தோழர் கந்தசாமி நினைவு நாள் கூட்டம் அருப்புக்கோட்டை தோழர் நன்மாறன் பேச்சு) இன்று அடிப்படைவாதிகளிடமிருந்து (பாரதிய சனதாவிடமிருந்து) நாட்டைக் காக்க வேண்டும் என்ற பெயரில் இந்திரா காங்கிரசுக்காக வாக்குக் கேட்கிறோம். நாளை அந்நியர்களிடமிருந்து நாட்டைக்காக்க வேண்டும் என்று கூறி (இத்தாலிய சோனியா?) பாரதிய சனதாவிற்காக வாக்குக் கேட்க மாட்டோம் என்பதற்கும் எந்த உறுதியான நிலைப்பாடும் இல்லை.

கும்பகோணம் மகாமகம் பற்றியும், அம்மா சின்னம்மாவின் ஆனந்தக் குளியல் பற்றியும், உடனடி செயல்பாட்டு விளக்கம் (RUNNING COMMENTRY) போலக் கிண்டலாக ஏறக்குறைய 5 நிமிடம்

www.padippakam.com

(அருப்புக்கோட்டை கலை இலக்கிய இரவில் மேஜிகல் ரியலிஸ? திரைப்படம் தாஜ் மஹாலின் உதவி இயக்குநர் பா(ரதி) கிருஷ்ணகுமார் உரை வீச்சு) பேசி மகிழ்ந்த நாம் இன்று அ.இ.அ.தி.மு.க. ஒரு இடது சாரிக் கட்சி என முடிவு செய்து நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.விற்காக ஓடிஓடி வாக்குக் கேட்டோம்.

இப்படி இலக்கியத்திலும், அரசியலிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணம் கேட்டால், "காலத்தின் கட்டாயம்" "முதல் எதிரி. இரண்டாம் எதிரி" என விளக்கம் சொல்வோம்.

ஒதுங்கிய ஒதுக்கிய இடத்தில் உள் நுழைந்துள்ளோம். செம்மலரில் செய்திக்கட்டுரையும் எழுதி உள்ளோம். ஆனால், அதில் ஒரு நேர்மை இருக்க வேண்டாமா?

குமார செல்வா தான் படைப்பாளியாகிய தடத்தைச் சொல்லும்போது தன் குடும்ப சூழல் தான் படித்த எழுத்தாளர்கள் பற்றி எல்லாம் கூறி, அதில் அவர் கருத்தின் படி சிலரை போலி எனச் சொன்னார். அந்தச் சிலரில் மேலாண்மை பொன்னுச்சாமியும், சு. சமுத்திரமும், தோப்பில் முகம்மது மீரானும் அடக்கம். இதில் நம் வசதிக்காக "சுந்தர் ராமசாமியில் தொடங்கி அனைத்து முன்னோடி எழுத்தாளர்களின் படைப்புகளும்..." என ஒரு வாக்கியம் அமைத்துக் கொண்டோம்.

குமார செல்வா "உக்கிலு" என்ற சிறுகதைத் தொகுதி மூலம் படைப்பாளியாக அறிமுகமாகி தொடர்ந்து கவிதைகளும் சிறுகதைகளும் எழுதி வருபவர். (அவர் ஐந்தாறு சிறுகதைகள் மட்டுமே எழுதியதாகக் குறிப்பிட்டது தன்னடக்கத்தால் தான்) அவரொன்றும் விடலை(யும்) இல்லை: வண்ணக்கதிரில் வந்த ஒரு சிறுகதையை கதையின் பெயரையும் பாத்திரங்களின் பெயரையும் மட்டும் மாற்றி சம்பவங்களைக் கூட மாற்றாமல் தன் நடையில் எழுதி இரண்டே மாதத்தில் வந்த செம்மலர் பொங்கல் மலரில் எழுதிக் கொண்ட மேலாண்மை பொன்னுச்சாமி ஒன்றும் மூத்தோரும் இல்லை. குமார செல்வாவின் கூற்றுப்படி போலி தான். (அசல் "பொழுதுகள் புலரும்" அரு.வி. சிவபாரதி-வண்ணக்கதிர் போலி: "அதிகாரி" - மேலாண்மை பொன்னுச்சாமி செம்மலர்)

சென்னையில் குமார செல்வா தலைவணங்கியது (ஐயா என் தகப்பனாரைப் போல நான் பேசியது உங்கள் மனதைப் புண்படுத்தி இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்) அவரது பணிவு. நேரம் முடிந்தது போய் உட்கார்" என் எழுத்து சர்வீஸ் கூட இல்லை உன் வயசு" என்று குமார செல்வாவிடமும் "உன் நேரத்தில் நீ பேசுவதாயிருந்தால் பேசு இல்லைன்னா பேசாம போயி

படிப்பகம்

www.padippakam.com

உட்கார்" என சாரு நிவேதிதாவிடமும் கூறியதோடல்லாமல் அகந்தையின் உச்சியில் நின்று தன்னை PH. பாண்டியன் என பிரகடனம் செய்ததுடன், தான் எழுதிய நாய்களின் கார்த்திகை, புரட்டாசி மாதக் கதை ஒன்றைக் கூறி இதில் ஆண் நாய் எது பெண் நாய் எது என தான் கூறாததால் தன்னை ஒரு பெண்ணிய வாதி என ஒத்துக் கொள்ளச் சொல்லி மன்றாடிய சு. சமுத்திரம் ஒன்றும் மூத்தோர் இல்லை. {அந்த நேரத்தில் இரண்டும் ஆண்நாயாக இருக்கலாம் என பார்வையாளர் பகுதியிலிருந்து வந்த குரல் (நம் ஆசாரி-விஸ்வகர்மா-வின் காதுகளில் கேட்காதது) இன்னும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.}

தன்னைப்பற்றி, தன் படைப்பைப் பற்றி தன் ஜாதியைக் கூறி முத்துக்குமார் விமர்சித்த போதும், தன் நியாயம் கூறி, உள்ளக் குமுறலுடன் தன்னை தவறாகப் புரிந்து கொண்டமைக்காக வருத்தப்பட்டு, புரிதலின் தவறைப் பண்பாட்டுடன் சுட்டிக் காட்டிய கோணங்கி எங்கே? தன்னைப் போலி என்ற உடன் பொங்கி எழுந்து குமார செல்வாவை தன் பரம்பரை விரோதியைப் போல் பாவித்த சு. சமுத்திரம் எங்கே?

"பிரச்சனையில்லாமல் பேசு" என சாருநிவேதிதாவிடமும், சாரு பேச வருமுன்னர் அறிமுகப்படுத்துகிறேன் என்ற பெயரில் "இவர் பேசினாலே தகராறு வரும்" என்பது போலவும் தன்னுரையாக சு.சமுத்திரம் ஒரு முன்னுரை வழங்கியபின், சாரு நிவேதிதா "மான் கறி சமைப்பது எப்படி? எந்த நடிகரைப் போல் எந்த எழுத்தாளர்?" எனப் பேசினார். (இடையில் சு. சமுத்திரமும் கூட "அப்ப நானு யாரு?" என உணர்ச்சி வசப்பட்டதாய் நினைவு) தன் கருத்தைச் சொல்லும் போது ஆவேசம் கொள்ளும் சு. சமுத்திரத்தின் தலைமையின் கீழ் பேச வேறு என்ன இருக்கிறது?

விடலைகள் கூடி மூத்தோரை கேலி செய்வது என நாமும் (சு.சமுத்திரத்தின் வழியிலேயே எழுத்துலக வயதை (Seniorityயை) கணக்கில் கொண்டால்) முடிவு செய்து விஸ்வ கர்மா என்ற விடலையைக் கொண்டு ராஜன் குறை, அ.மார்க்ஸ், வளர்மதி, ப்ரீதம், குமார செல்வா, சாரு நிவேதிதா போன்ற மூத்தோர்களைக் கேலி செய்ததாக உணர முடிகிறதே. என்ன செய்வது?

என்றென்றும் தோழமையுடன்,

மதிகண்ணன்.

18.12.1999

படிப்பகம்

www.padippakam.com

ஒரு துண்டுப் பிரசுரம்

பற்றுக் கோடற்று
எங்கு விழுந்தாய் தோழி
சுற்றிக் கிடக்கும் துயருற்ற கடல்களை
தாண்டி உன் பார்வைகள் விகாசிக்கும் முன்
குறுக்கப்பட்ட உன் நில வாசல்களில்
புதையுண்டு போனாய்
கங்கையிலிருந்து கிளம்பிய உன் ஆவேசம்
தெறித்தெங்கும் கடலலைகளில் திமிர்கிறது
நீயோ மௌனமான நதியின் வழியே
தடமற்று நீந்திப் போனாய்
உனது குருதி வெடிக்கும் நாளங்களின்
தத்தகாரமிடும் நடனங்கள் அரங்கேறும் அலைமீது
ஒற்றை வயலின் கானம் ஓய்கிறது
தேவதைகள் தரைவரக் கூடாது போலும்
உனது சிறுவர்கள் வளர்ந்தவராகிய பின்பு
கண் நிறைந்த காதலருக்கு காத்திருக்கும்
உன் பெண்கள் இன்னும் இருள் நிறைந்த
பயங்கரங்களுக்கு ஊடாக உறைகிறார்கள்
பகலில் உருவாக்கப்பட்ட அழகிய இரவின் மடியில்
உறங்கு மகளே! இன்னும்
தொலைவில் உறுத்தும் நட்சத்திரங்களுக்கிடையே
தூக்கி எறியப்பட்ட முடியாத ஒரு கேள்வியாக

(எழுத்துக் கவிதாயினி செல்வி சிவரமணிக்காக)

- யவனிகா ஸ்ரீராம்

○

பெரும் பத்திரிகை ஆரம்பிக்கிற அளவிற்கு பணம் இல்லை என்பதால் ஆரம்பிக்கப்பட்ட கனமான புதிய சிறு பத்திரிகை.

ஆரண்யம் (காலாண்டிதழ்)

ஆசிரியர்கள் : சுதேச மித்திரன்
ஸ்ரீபதி பத்மநாபா
370, ராமச்சந்திரா லே அவுட்
ராம் நகர்,
கோயமுத்தூர் - 641 009.

E-mail - aaranyam@hotmailcom

பகைவனைக் கண்டும்
புன்னகைத்தது
பூக்கள்
- பொன். குமார்

இல்லாத பேய்
எப்படி பிடித்திருக்கும்
ஆடுகிறதே ஆலமரம்
- பொன். குமார்.

படிப்பகம்

www.padippakam.com

துளசிப் புதர் நடுவே...

அனைத்து இயல்களும் கூடிய ஓர் கணிதச் செயல்பாடோ
ஏதோ ஓர் உக்கிரம் கண் விழித்து
சகலத்தையும் உலுக்கி வேறோர் ஒழுங்கில் அடுக்கிவிட்டு
மீண்டும் விழிமூடிக் கொண்ட சாகசமோ

துளசிப் புதர் நடுவே வெகுகாலம் தேம்பியபடி
சிக்கிக் கிடந்த ஓர் தென்னோலைக் கீற்று
எதிர்பாரா ஓர் வேளை பாம்பாய் நெளிந்து
மீண்டும் ஓலையானது?

உண்மைதான் நேற்றிருந்த தோட்டமல்ல
இன்று காணும் இத்தோட்டம்.

சூர்ய மின் விசிறி

புதுக் காற்றுண்டாக்கும் மின்விசிறியே
இடையுறாது சுழலும் என் சூரியனே
ஆக்கும் செயல்களால்
புகைமண்டி இருண்டு
கண்ணைக் கரிக்கும் இந்த அறையில்
எதற்காகவும் யாருக்காகவும் காத்திருக்காத
செயல் வீரம் நீ.

O

படிப்பகம்

www.padippakam.com

குழிப்பந்து

எந்த ஒரு குழியிலும் அமரவிரும்பாது
உருள விரும்பும் பந்தின் சோகம்
அறியாதவர்கள் அந்தச் சிறுவர்கள்
உருண்டோடும் பந்து
ஏதாவதொரு குழியில் அமரும்
எந்த ஒரு குழியிலும் அமரவில்லையெனில்
திரும்பத் திரும்ப உருட்டப்படும்
குழிப்பந்தெடுத்துத் தாக்குவதற்கும்
தாக்குதலினின்று தப்பிப்பதற்கும்
எப்போதும் துடிப்போடிருக்க வேண்டும்
அது ஒரு விளையாட்டு அவர்களுக்கு

வெகுயோசனைக்குப் பின்...

எங்கிருந்துவந்து சூழ்கிறது இந்த விழிகளைப்
பக்குவமாய்க் காக்கும் இந்த நீர்?
காட்சியளிப்பதே தன் கடமையென உணர்ந்தவராய் எழுந்தார்
துயர் குழப்பமிக்க இவ்வுலகில் தன் கடமை என்னவென்ற
வெகு யோசனைக்குப் பின் கடவுள்.

O

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதைத் தொகுப்பாய் ஒரு நவீனம்

- வீரா

வடஇலங்கை எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி கலாமோகன் (கே.எல். நேசமித்திரன் எனும் புனை பெயரிலும் எழுதக் கூடியவர்) 1983ல் இலங்கையில் ஏற்பட்ட பாரிய தமிழர் மீதான தாக்குதலிலிருந்து உயிர் பிழைத்து பிரான்ஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் புகுந்தவர். அவர் 1990முதல் 1997 வரை தாயகம். வீர கேசரி, பாரிஸ்முரசு, ஐரோப்பா முரசு, கோடை, மரபு, இனியும் சூல்கொள் ஆகிய ஏழு சஞ்சிகைகளில் எழுதிய பனிரெண்டு சிறுகதைகளின் தொகுப்பு, நிஷ்டை, நல்ல காகிதத்தில் சிறந்த வடிவமைப்பில் எக்ஸிலின் முதல் வெளியீடாக வந்துள்ளது.

"இரா" தவிர்த்த பதினொரு கதைகளிலும் ஆசிரியர் தானாகவே இருந்து கதை சொல்கிறார். அதிலும் குறிப்பாக ஈரத்தில் கலா மோகனாகவும், "கோடை"யில் தன் புனைபெயரான நேசமித்திரனாகவும், நிழலில் எழுத்தாளனாகவும்.... "இரா" கதையில் (ஓர் அறைக்குள் மட்டுமே நடக்கும் சிறுகதை) மூன்றாமிடத்தில் கதை கூறினாலும், அந்த மூன்றாமிடம் கூட அறையின் மையத்தில் உள்ள நாற்காலியில் அமர்ந்து அனைத்தையும் கூர்ந்து நோக்குவது போல (அவனுக்கும், இவளுக்கும்) பாத்திரங்களைப் பற்றி நெருக்கமாகச் சொல்கிறது. (இந்தக் கதையிலும் கூட இவனை நானாக மாற்றுவதில் ஒரு வசதி உள்ளது)

கதைகள் எழுதி வெளியான தேதிகளின் வரிசைப்படி தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இந்தப் பனிரெண்டு கதைகளையும் (கடைசி ஐந்து பத்திகள் தவிர்த்து) மழை, மூன்று நகரங்களின் கதை எனது தேசம், இழப்பு, உருக்கம்,. தெரு, நிஷ்டை, நிழல், இரா, கோடை, ஈரம், கனி, மழை(யின் கடைசி ஐந்து பத்திகள் "மறையும் சூன்யம்" என்ற தலைப்புடன்) அடுக்கி வாசித்தால் பதின்மூன்று உபதலைப்புகளுடன் ஒரு நவீனத்தைப் (பெருங்கதையைப்) படிப்பது போல் உள்ளது (இதற்காகவே "இரா"வில் "இவண்", "நான்" ஆக வேண்டி உள்ளது.

பனிரெண்டு சிறுகதைகள் இணைந்து ஒரு நவீனத்தைப் படிக்கும் உணர்வைத் தருவதும், ஒரு நாவலுக்குள் பனிரெண்டு சிறு கதைகளை உள்ளடக்க முடியும் என்பதும் ஆச்சர்யம் தான். உருக்கம் தவிர்த்த பிற அனைத்து சிறுகதைகளும் ஒரே விதமான சொற்கட்டுளைக் கொண்டதும் இவ்வுணர்விற்குக் காரணம் "உருக்கம்" மார்க்ஸின், கூலி மற்றும் சுரண்டல் மீதான தத்துவத்தை மட்டுமல்லாது, கிராம்ஸி கூறியது போல் தொழிற்சங்கத்தின் மடமைகூட வாய்ப்புகளையும் சுட்டிக்காட்டுகிறது. அப்பாவியான அந்த புளோச்சிங் தொழிலாளியின் எண்ணங்கள் கண் முன் வருகின்றன காட்சி உருவாய்.

"நேற்று, பத்திரோனின்னரை ரெண்டாம் மோள், நாய்க்குட்டி யோடை றெஸ்ரோறண்டுக்கு வந்தது. கோப்பை கழுவிக் கொண்டிருந்ததால், கை குலுக்க

படிப்பகம்

www.padippakam.com

முடியேல்லை. சிரிச்சேன், நாய்க்குட்டி என்னைப் பார்த்து வாலாட்டீச்சது. அதுக்கு என்னிலை நல்ல விருப்பம். எப்பப் பார்த்தாலும் என்னைப் பார்த்து வாலாட்டிறது. எனக்கு வாலில்லை. இருந்தால் நானும் அதுக்கு வாலாட்டியிருப்பேன். அடையான்களைப் பாத்து அது ஒருநாளும் வாலாட்டியதில்லை.

"இழப்பில்" இறந்து போன அம்பிகா என்ற வேசியின் சிதைமுன் நிற்கும் ஆசிரியரின் நினைவுகளில் அம்பிகா வருகிறாள். அந்நினைவில்
"உனக்கு எத்தனை வயது?"

"இருபத்தொன்று"

"மூன்று வயதில் எனது மகன் செத்திருக்காதுவிடின்"

அவனுக்கும் இப்போது 21ஆகத்தான் இருக்கும்" என்னைத் தன் மார்புடன் சேர்த்து இறுக அணைத்தாள்.

ஆசிரியர்	:	கலாமோகன்
வடிவமைப்பு	:	லெனாகுமார்
வெளியீடு	:	**EXIL,** **Chez R. Inpavali,** **94, Rue de La Chapelle,** **75018, PARIS France**
இந்திய விற்பனை	:	யாதுமாகி 6, பருவத சிங்கராஜா தெரு, திருநெல்வேலி டவுண்
விலை	:	ரூ. 45/-

"தெரு" சிறுகதையில் இரவிலும் விழித்திருக்கும் புனித டேனிஸ் வீதி. தாங்காமல்... உடலை விற்கக் காத்திருக்கும் விபச்சாரிகள்....புனித டேனின் வீதிக்கு அவ்வப்போது செல்வதுண்டு. நிச்சயமாக பேரம் செய்வதற்கு அல்ல.. மனித உடல்கள் சிதையும் கொடூரம் முடிவிற்கு வந்து விட்டதா என்பதைப் பார்ப்பதற்காகவே...

அதே "தெரு"வில் ஓர் சிலுவையை நினைவின் முன் கொண்டு வரும் அந்த டென்ஹாக் சிவப்பு விளக்கு வீதிகளுக்குள் உள்ள தொலைபேசிக் கூடத்துள் நான் ஒருவரை கண்டு நடுங்கினேன்.யாரிவர்?

தோழர் ஸ்டாலின்தான். அந்த வீதிகளில் நடமாடும் மனிதர்களை முறைத்துப் பார்த்தபடி அவரது விழிகள். பார்வையின் அர்த்தமும், அவர் அங்கு வந்ததின் நோக்கமும் எனக்குத் துண்டாகப் புரியவில்லை. நண்பரிடம் கேட்டேன். "கிழக்கு மேற்கு ஜெர்மனிகள் இணைந்தபோது, டென்ஹாக்கின் ஒரு சந்தியில்

படிப்பகம்

www.padippakam.com

இருந்த இவரைத் தூக்கி வந்து அந்தத் தொலைபேசிக் கூடத்துக்குள் போட்டு விட்டனர்."

கலாமோகனுக்கு நையாண்டியும் நன்கு வருகிறது. சில கதைகளில் ஆங்காங்கே தென்பட்ட நையாண்டி "கனி"யில் கதை முழுவதும் விரவி உள்ளது

"உங்கள் முடிவு இதுவாயின் நான் பரமனிடம் சென்று விடுவேன்."

"யார் அந்த பரமன்? உன்னைத் தவிர்த்து பரமன் என்பவனிடம் உனக்குக் கள்ள உறவு உண்டா?"
"பரமன் என நான் சொன்னது பரமபிதாவை"
"ஓ! நீ தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து விட்டாயா?"
"ஆம்!"

....

"ஏன் தட்டினீர்கள்? உங்களிடம் தான் திறப்புள்ளதே?" எனது ஸ்திரி கேட்டாள்.

"வழியில் வரும்போது, ஒருவர் என்னிடம் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார். இதனைப் பரிட்சிப்பதற்காகவே"

கலாமோகன் கவிஞர் என்பதால் கதைகளில் ஆங்காங்கே கவிதைத் தூவல்கள்... உரைநடையின் இடையிலும் கூட படிம உத்தி.... வார்த்தைகளில் ஓர் லயம்...

"சூனியத்துள் சூனியத்தை மறந்திருந்தபோது
என் தலைமீது கவிதைகள்
கொட்டிக் கொண்டிருக்கின்றன."
"நிஜம்
தன்னடைய நிஜமற்ற தன்மையைக் கடந்து
உடலின் அழிவிற்கு முன்
நிஜமற்ற வாழ்வை
வாழ்தலும் சாத்தியமே
எனும் போக்கை மறுப்பது"
"ஒருமைகள் பன்மைகளாகி,
பன்மைகள் பன்மைகளாகாமல்,
இன்னொரு ஒருமையில்
வாழும் நான்"
"தேகதாகங்களின் இயற்கை சார் கிளர்ச்சிகளைப்
பொய்த்தூக்கமும், குறட்டைகளும் செய்கின்ற
அவலட்சண புருஷர்களை அலட்சியம் செய்து நிந்தித்து
இவனும், இவளும்
புனித அர்த்தங்களின் கண்டுபிடிப்பிற்காகக்
கண்களைப் பிடுங்கியெறியத் தயாரான நிலையில்...

படிப்பகம்

www.padippakam.com

"எனது நானும், அவளது நானும் அழித்து வான மண்டலம் எமக்கு முன்னே ஒரு குறுக்கனிக் கடுகாக"
"நாம் மட்டுமே அசையாதுள்ளோம். அசைவுகளுக்கேற்ப அசைந்து விட்டால் இசைவு வந்துவிடும்".
"நான் பெட்டிச் சர்ப்பமாகி அவளைக் கொத்திக் கொத்திக் கொல்ல வெளிக்கிட்டேன். (தொடங்கி விட்டேன்) அவள் இறந்தாளா? தெரியாது. நான் அவளிற்கு முதல் இறந்து விட்டேன்."

கவித்துவமான நவீன எழுத்தின் அடையாளமான நிஷ்டையில் பெண்கள் மீதான பரிதாபமும், பாலியல் பிரச்சனைகளும், கொஞ்சம் தூக்கலாகத் தெரிகின்றன. கதாசிரியர் குறிப்பிட்டபடி அனைத்துக்கதைகளும் புகலிடத்தில் இருந்து எழுதப்பட்டதால் இவைகளைப் புகலிடச் சிறுகதைகள் எனக் கருதிக் கொள்ளலாம். இக்கதைகளில் புலம்(தாயகம்) பற்றிய கதாசிரியரின் தீர்க்கம் (VISION)எதிர்பார்ப்பு ஏதும் என் அறிவிற்கெட்டிய வரை தென்படவில்லை என்ற வகையில் கொஞ்சம் வருத்தமே. ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது என்பதால் இனி வரும் தொகுப்புகளில் இதையும் எதிர்பார்ப்போம்.. ஏனெனில், அவை இத்தொகுப்பில் இல்லாத அவரின் பிற படைப்புகளில் இருக்கலாம்.

O

நரைத்த பின்
நினைவுக்கு வரும்
நரைக்காத நாட்களைப்போல
ஞாபகமிருக்குமா
இறந்த பின்
வாழ்ந்த நாட்கள்
- அன்புச்செல்வன்.

அம்பத்தூர் தெற்கு கிளையிலிருந்து கலை இலக்கியப் பெருமன்ற வெளியீடாக வரும் மாத இதழ்

கலை

ஆசிரியர் : சு. மணிமுடி
26, பாரதி தெரு,
செல்லியம்மன் நகர்,
அம்பத்தூர்,
சென்னை - 600 058.
தொலைபேசி : 6253589
ஆண்டு சந்தா : ரூ.50/-

கல்வி, கற்பித்தல்முறை, குழந்தைகள் குறித்த அக்கறையுடன் "கையளவு உலகம்" எனும் முகப்பு முழக்கத்துடனும் வெளிவரும் காலாண்டிதழ்.

நாளை

ஆசிரியர் : எல். அந்தோணி சாமி
சிடா அறக்கட்டளை
98ஏ, கூட்டுறவு நகர்,
திண்டுக்கல் - 624 005.
E-mail : tonyind@md3.vsnl.net.in
ஆண்டுக் கட்டணம் :ரூ.25/-

கதை, கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, மதிப்புரை, (பொன்னீலன்) கேள்வி - பதில் என நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மாதமொருமுறை மலரும்

தாமரை

ஆசிரியர் : சி. மகேந்திரன்
161, பிரகாசம் சாலை,
சென்னை - 600 108.
ஆண்டு சந்தா : ரூ.60/

படிப்பகம்

www.padippakam.com

அறியப்படாத தமிழகம் - திறனாய்வு

- மு. பாலசுப்பிரமணியன்

அறியப்படாத தமிழகம் அனைவரும் அறியப்பட வேண்டிய நூல் பேரா. தொ.ப. தமது ஆழ்ந்த தமிழ்ப்புலமையானாலும் அறிவியல் நோக்கினாலும் இந்நூலை உருவாக்கியுள்ளார். வழக்கமான மரபுகளில் இருந்து மாறுபட்டு உண்மையான மக்களின் மரபுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

சிற்றூர்களில் நிலவும் பழமொழிகள், சொலவடைகள், ஒழுகலாறுகள் போன்ற பல்வேறு மக்கள் இலக்கியக் கூறுகளை முடிந்த மட்டும் திரட்டித் தர முயன்றுள்ளார்.

இந்நூல் பல்வேறு ஆய்வுகளுக்கு அடித்தளமிடுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. சங்கத்தமிழ் என்ற சொல் பேசப்படவில்லை என்ற பொய்யுரையை தகர்த்து புறநானூற்றில் இருந்து எடுத்துக்காட்டு தந்து தமிழின் பண்டைய மக்கள் ஈடுபாட்டை உணர்த்துகின்றார். குறிப்பாக, தமிழர்களுக்கு மதம், சாதி கடந்த தமிழின் உணர்வு அடிப்படையாக இருப்பதற்காக இந்த 2300 ஆண்டுகால தொடர்ச்சிதான் என்பதை மறுக்க இயலாது.

உப்பைப் பற்றிய விரிவான ஆய்வுக்கு வழிகாட்டுகிறார் நூலாசிரியர். அதே போல் பருத்தியும், நெசவும் பற்றியும் இவர் கூறும் கருத்துக்கள் (சான்றுகளோடு) அதிர்ச்சியாகவும் விரிவான ஆய்வுக்கு இட்டுச் செல்லும் வகையிலும் உள்ளது.

பனுவல் (Textile) என்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறார். இங்கு இளங்கோவடிகள் கூறுகின்ற "புரிநூல் மார்பர்" என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் நெசவுத் தொழில் பெண்டிருக்கும் குறிப்பான கணவனை இழந்த பெண்டிருக்கு உரியது என்பது மிக நுட்பமான செய்தி இது. ஆழ்ந்த ஆய்வுக்கு உட்பட வேண்டியது ஏனெனில், திருவள்ளுவர் நெசவாளர் என்ற செவழிக் கதையால் அறிகிறோம். ஆனால் திருக்குறளில் நெசவுத்தொழில் பற்றி இப்போது நம்மிடம் உள்ள நிகழ்வுகளில் இல்லை. ஒரு வேளை தொடுக்கும்போது அது கைவிடப்பட்ட என்பதும் தெரியவில்லை.

மக்கள் விழாக்கள் எவ்வாறு மதவிழாக்களாக மாறுகின்றன என்பதற்கு "தீபாவளி" கட்டுரை நல்லசான்று ஏனெனில், அறுவடைத் திருவிழாவான தைப்பொங்கல் மகா சங்கராந்தி என்று வானொலியாலும் தொலைக்காட்சியாலும் சித்தரிக்கப்படுவது நாம் இப்போது கண் கொண்டு காணும் காட்சியாகும். கார்த்திகைத்திருவிழா தீபாவளியாக மாறிப்போன கதையும் அதற்காக அரசுகள் ஊக்கத்தொகை வழங்கி நிறுவ முயல்வதும் மறுக்க முடியாத பண்பாட்டுத் திணிப்பாகும்.

படிப்பகம்

www.padippakam.com

எண்ணெய் பற்றி ஆசிரியர் விரிவான செய்திகள் கூறுகிறார். மிகவான இலக்கிய கல்வெட்டுச் சான்றுகளை குறிப்பிடுகின்றார். சிலம்பில் வருகின்ற "ஒகிம விளக்கு" எனப்படும் அணையா விளக்கைப் பற்றி ஆராய்ந்து விரிவாக இருந்து வந்ததா அல்லது தமிழ்நாட்டின் பண்டைய நுட்பவியலா என்பது இன்னும் விளங்காமல் உள்ளது.

ஆசிரியர்	:	தொ. பரமசிவம்
வெளியீடு	:	ஜெயா பதிப்பகம் 4-A, பக்தராய் பணிவார் தெரு, பாளையங்கோட்டை - 627 002.
விலை	:	ரூ. 30/-

மத்தியானப் பறையர் என்ற கருத்து மிகச் சிறந்த சமூகவியல் அசைவிற்கான ஆய்வு செய்தி இது பற்றிய விரிவான மாந்தரியல் (Anthropology) ஆய்வு செய்தால் பல்வேறு உண்மைகள் வெளிவரலாம்.

பிள்ளையார் என்பது கணபதி, வணிக கணங்களுக்கான கடவுள் என்பது புதிய இனிய செய்தி. சாத்து எனப்படும் வணிகக் கட்டிடத்திற்கு கணம் என்ற பெயரும் உண்டு. மிகப் பின்பு வந்த கடவுள் பழைய கடவுள்களை பின்னுக்குத் தள்ளி இப்போது ஊர்வலமாய் போய் அடிதடியைக் கிளப்புகின்றது.

பிச்சை என்பது தமிழர்களின் பண்டை வழக்கமல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க செய்தி ஏற்பது இகழ்ச்சி என்பதும் பிச்சை புகினும் என்பதும் பிச்சைக்கு தரப்படும் இழிவை உற்றுநோக்கல் வேண்டும்.

அதே போல் ஈதல், கொடை, தானம் போன்றவையும் இங்கு பெரிதும் ஆய்வுக்கு உட்பட வேண்டிய சொற்களாகும்.

கல்லறை பற்றிய குறிப்புகளில் அரிக்க மேடு ஆய்வு பற்றிய குறிப்புகளையும் சேர்த்திருந்தால் இன்னும் ஆக்கமுள்ளதாய் அமைந்திருக்கும்.

தையலைப்பற்றி சூடாமணி "நீண்டு பிரிந்திருந்ததைத் தலத்து மேவிய பொல்லந்துன்மை" என்று "அத்து", "பொல்லம்", "துன்மை" என்ற சொற்களைக் கூறுகின்றன. இதுவும் ஆய்வுக் குரியவையோ, இன்றும் தென் மாவட்டங்களில் பொல்லம் பொத்துதல் என்ற சொல் உள்ளது.

அதே போல் பெண்களுக்கான உடைகளான, வார், விசிகை, பட்டிகை, வட்டுடை போன்றவையும் ஆய்வுக்குரியன.

புடவையின் பிற பெயர்களான கோடி, படாம், கூறை, பஞ்சி, கலை, கலிங்கம், அறுவை போன்றவையும் ஆய்வுக்குரியன.

இதே போல் அனைத்துக் கடமைகளும் ஆய்வுக்கான

படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாதைகளைக் காட்டி நிற்கின்றன. மேலும் தேங்காய் பற்றிய ஆசிரியர் குறிப்பிடுகின்ற செய்தியில் சிறு முரண்பாடு தென்படுகிறது.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் தென்னை பற்றிய செய்திகள் இல்லை என்று கூறுகின்றனர். பதிற்றுப் பத்தில் இச்செய்தி உள்ளது. சீவகசிந்தாமணியிலும் வந்துள்ளது. தென்னைக்கு தாழை, தென், இலாங்கலி, நாளிசேரம் என்ற சொற்கள் உள்ளன. சேரம் என்ற மலையாள மூலச்சொல்லில் இருந்தே சேரம் என்ற பெயர் வந்ததாக ஒரு கருத்தும் உள்ளது.

இதே போல் நிர்வாணம் என்பதற்குச் ஆடையின்றி எனப்பொருள்படும் சொல மணிமேகலையில் வருகின்றது. நக்க சாரணர் நாகர் வாழ்மலை என்ற தொடரும், நக்க சாரணர் நயமிலர் தோன்றி (மணி 16:4-59) என்ற தொடரும் ஆடையற்ற மக்களைக் குறிக்கின்றது. நக்கவாரம் எனப்படும் "நிக்கோபார்" ஆடையற்ற மக்கள் வாழும் பகுதி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. "மந்தனே கூர்மையில் லோக்கனிர்வாணி நாமம்" என்பது சூடாமணி நிகண்டு ஒட்டு மொத்தத்தில் ஓர் அரிய ஆய்வுக் குறிப்பேடு இந்நூலாகும்.

மிகவும் உழைத்து இந்நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார். ஆனால் இது முழுமைபெற வேண்டுமானால் ஒவ்வொரு தலைப்பையும் எடுத்து இன்னும் விரிவான தளத்தில் ஆராய வேண்டும்.

○

இலங்கையில் வெளியிடப்பட்ட பல இலக்கியச் சிற்றிதழ்கள் காணாமல் போனது தெரிந்து, தொடரும் பயணத்தின் மீதான நம்பிக்கையில் புதிதாய் எட்டெடுத்து வைக்கும் கவிதைகளுக்கான இதழ்

யாத்ரா

ஆசிரியர் : அஷ்ரஃப் சிஹாப்தீன்
37, Fhankanatta Road,
Mobola,
Wattala - 11300
Srilanka.

தனி இதழ் : ரூ.20/-

நாளைய வரலாறு நல்லதாய் அமைய ஏற்றவை சொல்லலே எங்கள் பணியாம் என்ற முழக்கத்தை உள் முகப்பில் தாங்கி வரும் இருமொழி மாத இதழ்

முங்காரி

ஆசிரியர் : குன்றம் மு. ராமரத்நம்
புலமைப் பண்ணை
சுகர் கேன் அஞ்சல்
கோவை - 641 007.
தொலைபேசி : 472777

ஆண்டுசந்தா ரூ. 35/-

தமிழ்நாட்டின் சிறப்புமிக்க தீவு இராமேஸ்வரத்திலிருந்து இருதிங்களுக்கொருமுறை அழுத்தமாய் பதியும்

புதிய தடம்

ஆசிரியர்: மேக வண்ணன்
28-B, லெட்சுமணதீர்த்தம் தெரு,
இராமேஸ்வரம் - 623 526

ஆண்டு நன்கொடை : ரூ. 50/-

படிப்பகம்

www.padippakam.com

வார்த்தை எதற்கு

தொடர்ந்த
மிகவும்
வறட்சியான நாள்களில்
நல்ல நாள் இது.

வியாபாரி
வியாபாரியாகவே இருக்கிறான் எந்நாளும்
கலைஞனாகவே
இருப்பது நிரம்ப கஷ்டம்

நான்
நவீனமானவன் இல்லை
நவீனமாக
வேண்டுமா என்ன

யோசித்துயோசித்து
யோசனையே வாழ்வு
வெறுமையைக் கட்டியிழுத்து
வரவா வார்த்தை

- அபராஜிதா

உலகத் தமிழர்களின் ஒரே செய்தி ஏடு என்ற உண்மையை முகப்பில் தாங்கி நட்சத்திர அடையாளத்துடன் வேறு பத்திரிகைகளில் வராத தமிழர் தொடர்பான செய்திகளுடன் தென்னாசியச் செய்திச் சேவை மையத்தின் திங்களிருமுறை செய்தி மடல்.

தென் செய்தி

ஆசிரியர் : பழ. நெடுமாறன்
17/1, நரசிம்மபுரம்,
மயிலை,
சென்னை - 600 004.
ஆண்டு நன்கொடை : ரூ.50/-

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே எனும் முகப்பு முழக்கத்துடன் இலங்கையிலிருந்து நடுநிலைமையுடன் நம்ம தினசரிகளை இரண்டாய் மடித்தால் கிடைக்கும் அளவில் இருவாரங்களுக்கொருமுறை வரும்

சரி நிகர்

ஆசிரியர்:பாலசுப்பிரமணியன்
வசந்தம்
இலக்கம் 19/04, 01/01,
நாவல வீதி,
நுகேகொட,
இலங்கை.
மின் அஞ்சல் : sarini@sltnet.lk
ஆண்டு சந்தா : ரூ.300/-

www.padippakam.com

அ-காலம்

- மதிகண்ணன்

தினக்குறி
(நடுநிலை நாளிதழ்)

மயிரிழையில் மந்திரி உயிர் தப்பினார்

கிராமத்து வாலிபர் கைது !

மதுரை நவ.14: மதுரை அருகில் உள்ள ஒருதனியார் உயர்நிலைப் பள்ளியில் குழந்தைகள்தினவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது கல்வி அமைச்சர் மாதவனூர் நாகராசனைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றது. கொலை செய்ய முயன்றவனை போலீசார் கைது செய்தனர். அதன் விபரம் வருமாறு :

கொலை முயற்சி

மதுரை அருகே உள்ள தென்னை மரப்பட்டி கிராமத்தில் ஒரு தனியார் உயர்நிலைப்பள்ளி உள்ளது. அந்தப் பள்ளியில் குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவனூர் நாகராசன் கலந்து கொண்டார். அவர் குழந்தைகள் நிலை பற்றியும் மாணவர் கடமை பற்றியும் சிறப்புரையாற்றினார்.

தென்னை மரப்பட்டியின் ஒரு பிரிவான சாத்தன்குடி கிராமப் பகுதியைச் சேர்ந்த ஒருவன் இந்நிகழ்ச்சியின்போது அமைச்சரை கொலை செய்ய முயன்றான். கொலை முயற்சி முறியடிக்கப்பட்டு கொலைகாரன் கைது செய்யப்பட்டான்.

பயங்கர ஆயுதங்கள்

கைது செய்யப்பட்டவன் பெயர் அறிவரசு (25) என்றும் அவன் சாத்தங்குடியைச் சேர்ந்தவன் என்றும் போலிஸ் விசாரனையில் தெரிய வந்தது. அவனிடமிருந்து கத்தி ஒன்றும் குத்தும் ஆயுதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. மேலும் அவனிடமிருந்த பையிலிருந்து "டைம்பாம்" தயாரிக்கப் பயன்படுத்தும் "ஒயர்" களும் "மீட்டர்" ஒன்றும் கைப்பற்றப்பட்டது. மதுரை மாவட்ட சப் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

பயங்கரவாத இயக்கம்

கைது செய்யப்பட்ட அறிவரசன் சாத்தங்குடி தென்னை மரப்பட்டி கிராமங்களில் ஒரு இளைஞர் அமைப்பில் பொறுப்பில் இருக்கிறான். இந்த இளைஞர் அமைப்பிற்கும் த.த.த.இ.இ.இ.என்ற பயங்கரவாத அமைப்பிற்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் போலீசார் கருதுகின்றனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

கண்டனம்

இக்கொலை முயற்சி மனிதாபிமானமற்ற செயல் மாற்றுக் கருத்துகளை பேசித்தான் தீர்க்க வேண்டும். பயங்கரவாதத்தால் அல்ல என்று எதிர்க்கட்சித்தலைவர் சி.சா.சே.கே. குமரன் நீராத்துலிங்கம் ஒரு அறிக்கையில் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

மேலும் பல கட்சித்தலைமைகளும் இக்கொலை முயற்சியை வன்மையாகக் கண்டித்துள்ளன.

பதவி விலக வேண்டும்

நேற்று நடைபெற்ற தே.இ.பா.கா.ஜ. கட்சியின் செயற்குழு, மந்திரியின் உயிருக்கே பாதுகாப்பு தர இயலாத அரசு மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தர முடியாது. மந்திரியையே கொல்லத் துணியும் அளவிற்குச் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து உள்ளது. எனவே இந்த அரசு பதவி விலக வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியது.

பகீர் என்றது. அறிவரசன் கைதா? கொலை முயற்சியா? கடிக்கிற எறும்பைக்கூட கையால தட்டுனா செத்தாலும் செத்துருமுன்னு வலியத் தாங்கிக்கிட்டு ஊதி ஊதி வெரட்டுற அறிவரசாவது கொலை செய்ய முயற்சி பண்றதாவது? வேற யாராவதா இருக்குமா? செய்திப்படி பாத்தா தெளிவா இருக்கு நம்ம அறிவரசு தான். பஞ்சாயத்து பள்ளிக்கூட காலத்துல இருந்து இன்னிக்கு வரைக்கும் நெறைய விஷயங்கள்ல கூட நிற்கிறவன். ஊருக்குப் போனா சொல்லிக்கிற மாதிரி, நாலு விஷயம் பேசுறமாதிரி நண்பனா இருக்கிறதே என்னோட அறிவரசுதான். ஒடனே ஊருக்குக் கெளம்பனும் என்ன ஏதுன்னு ஒன்னும் புரியல.

*"**ஆத்தா...** என்ன ஆத்தா நடந்துச்சு. பேப்பர்ல பாத்துப்புட்டுல்ல நானு பெங்களுர்ல இருந்து ஓடியாரே"*

"அத ஏம்ப்பா கேக்குற. புள்ளய நாய அடிக்கிற மாதிரி அடிச்சுட்டாஞ்கப்பா. இவே ஏந்தே அங்கெல்லாம் போறானோ. வேலைக்குப் போனமா வீட்டுக்கு வந்தமான்னு இல்லாம பள்ளிக்கூடத்துல மந்திரி பேசுறத வேடிக்க பாக்கப் போனவனுக்கு வெனயா இப்படி ஆயிருச்சேப்பா. எந்த நாயி எதப் பேசுனா இந்த நாயிக்கி என்ன? பேசாம இருக்க வேண்டியதானே" "ஆத்தா கொஞ்சம் பொறுமையா இருங்க ஆத்தா. பள்ளிக்கூடத்துல என்ன நடந்துச்சு இவனுக்கு என்ன ஆச்சு"

"எனக்கு ஒரு எழவும் தெரியாது. முந்தாநாள் நம்ம சுப்பன் மகந்தா வந்து ஆத்தா எங்க பள்ளிக் கூடத்துல வச்சு அரசு அண்ணனை போலீசுக்காரக புடிச்சுட்டுப் போயிட்டாக"ன்னு சொன்னா. பதறியடிச்சுப் போலீஸ்டேசனக்குப் போனா என்னய உள்ளேய உடல. அப்புறம் ஆறுமணியப் போல நம்ம படிப்பகத்துப் பயலுகதான் ஒரு வக்கீலோட வந்து புள்ளய வெளிய கொண்டாந்தாஞ்க. காலைல இருந்தே புள்ளய அடிச்சு குத்துசுரும் கொலையுசுருமாத்தா அனுப்பனாஞ்க. நேர ஆசுபத்திரிக்கிப்போயி குளுகோசு பாட்டுலெல்லாம் ஏத்தி கொஞ்சம் தெளிச்சி கெடச்சதும் கூட்டியாந்து வீட்டுல போட்டுருக்கு"

"எதுக்குத்தா கைது பண்ணாகலாம்?"

படிப்பகம்

www.padippakam.com

"அது அவங்குளுகிட்ட கேக்கனும். இல்ல. இவங்கிட்டே கேக்கனும். இவனால வாயி வீங்கிப் பேசவே முடியலயே எத்தனை மீட்டிங்ல என்னமாப் பேசும் ஏம்புள்ள. இந்த லெட்சணத்துல தெனமும் காலைலயும் சாய்ங்காலமும் டேசன்ல போயி கையெழுத்து வேற போடணுமாம். நல்ல மனுசன். அந்த ரைட்டரு. நாலு நாளக்கி நானே வந்து கையெழுத்து வாங்கிக்கிறே ஆத்தானுட்டு வந்து வாங்கிட்டுப் போறான்.

"நடக்க முடியாத அளவுக்கு அடிச்சது வெளிய தெரியக் கூடாதுன்னுதான் வந்து கையெழுத்து வாங்கிட்டுப் போறானுக ஆத்தா".

"இல்லப்பா இல்ல, அந்த ரைட்டரு நெசமாவே நல்லவனாட்டந்தா தெரியுது. தம்பிய அடிச்ச அன்னிக்கி அவன் இல்லையாம். "இருந்திருந்தாலும் ஏதுஞ்செஞ்சிருக்க முடியுமான்னு தெரியல ஆத்தா"ன்னான். உங்கவயசுதான் இருக்கும் நல்லா படிச்ச புள்ளயாட்டம் தெரியுது".

"சரி சரி சாயங்காலம் வருவாருல்ல நானு கேட்டுக்குறேன்".

"வந்ததுலேயிருந்து அவன் கதயாப் பேசிக்கிட்டு இருக்கேன். நீ சாப்புட்டயாப்பா.... வேலையெல்லாம் எப்படி நடக்குது...ம்..ஒஞ் சோட்டாளக் கொஞ்சநேரம் நீ காவக்காத்துட்டு இரு. நானு காட்டு வரைக்கும் போயிட்டு வரேன்.

அரசு நல்லாத் தூங்கிக்கிட்டு இருக்கான். உடம்புல அங்கங்க அடிபட்டதுக்கான அடையாளந்தெரியுது. எழுப்ப வேணாம். அவனாவே எந்திரிக்கட்டும் என்ன நடந்துச்சுன்னு அவனக் கேட்டாத்தான் கரைக்டாத் தெரியும். ஊருக்குப் போறதுக்கு முதநாள்தான் அறிவரசப் பார்த்தேன். அன்னைக்கி ரெம்ப வித்தியாசமான நாள். சாயங்காலம் வழக்கம் போல நாங்க எங்க "இளைஞர் இலக்கிய இயக்க" படிப்பகத்துலதான் சந்திச்சுக்கிட்டோம். அன்னக்கிப் படிச்ச இலக்கிய பத்திரிகயப் பத்தி பேசிக்கிட்டு இருந்தோம். வழக்கம் போல இலக்கியம் பேச ஆரம்பிச்சு இசங்களுக்குள்ள போயி பின் நவீனத்துவம் வந்ததும் ரெண்டு பேருமே ரெம்பக் குழம்பிப் போயிட்டோம். குழப்பத்த் தெளிய வச்சு முடிவெடுக்க நெனச்சு சிகரெட் பிடிக்க பக்கத்துல இருக்குற வயக்காட்டு பம்பு செட்டுல போயி உக்காந்தோம். அப்பத்தான் அந்தக் கடிகாரத்த அரசுக்கிட்டக் குடுத்தேன். அந்தக் கடிகாரத்தால ஏதும் இப்படி ஆயிருக்குமா? அந்தக் கடிகாரம் பத்தி நான் சொன்னப்ப அவன் ரெம்பக் கிண்டல் செஞ்சான். அன்னக்கி நடந்தத திரும்பவும் நெனவு படுத்திக்கலான்னு நெனக்கிறேன்.

"பின் நவீனத்துவத்துல குறிப்பா தொன்மங்களக் கையாள்றது, அதீதப் புனைவுன்னு ஒரு கோட்பாடு இருக்கே அதப்பத்தி நீ என்னடா நெனக்கிற".

படிப்பகம்

www.padippakam.com

"தீப்பெட்டி குடு.. புனைவுல என்ன அளவான புனைவு. அதீதப் புனைவு... முன் விட்டை பின்விட்ட மாதிரியா?...இந்தா தீப்பெட்டி."

"அதீதப் புனைவுன்னா கற்பனைக்கு எட்டாதது. பகுத்தறிவுக்குப் புறம்பானது. நெனச்சே பாக்க முடியதது இப்படி" "பகுத்தறிவுக்குப் புறம்பானதுன்னு சொன்னதுந்தா ஞாபகம் வருது. சின்ன வயசுல வீட்ட விட்டு ஓடிப்போன என் தாய்மாமன் திடீர்னு இன்னிக்கிக் காலைல வந்தாரு. வந்ததுமே சொல்லனுன்னு நெனச்சேன். வேற விஷயம் பேசுனதால மறந்துட்டேன். அவரு என்ன பன்றார் என்ன ஏதுன்னு கேட்டா சிரிக்கிறாரு, பைத்தியம் மாதிரி. ஆளும் அப்படித்தான் இருக்காரு. கொஞ்சம் பெரிய தாடி. அக்கரையில்லாம ஏதோ பேருக்கு உடுப்பு செலநேரம் பெரிய தத்துவஞானி மாதிரியும் செலநேரம் நம்ம தமிழ் சினிமா காமெடியன்கள மாதிரி கூறுகெட்டதனமாவும் பேசுறாரு. மத்தியானமே கௌம்பிப் போயிட்டாரு. போகும் போது ஏங்கிட்ட இந்தக் கடிகாரத்தக் குடுத்து,'கட்டிக்க, இதுக்குப் பேரு காலம். இந்தக் கடிகாரம் இன்னும் மூணு நாளக்கி ஓடாது. அதுக்கப்பறமா ஓடும். இந்தக் கடிகாரம் ஓடாத வரையிலும் நீ மிருகம் பறவைகளோடயெல்லாம் பேசலாம்"ன்னாரு. நானு அவர ஒரு மாதிரியாப் பாத்தேன் 'காலம் உனக்கு நெறைய கத்துத்தரும் கட்டிக்க'ன்னுட்டு சட்டுனு போயிட்டாரு."

"உண்மைதான் உங்கமாமா தமிழ்பட காமடியன்கள மாதிரிதான் பேசியிருக்காரு."

"இல்லடா அவரு அந்த நேரத்துல ஞானி மாதிரிதான் பேசுனாரு. அவரு சொன்னமாதிரியே இந்தக் கடிகாரமும் ஓடல".

"இப்ப நீயும் காமடியன் மாதிரிப் பேசுற. ஓட்டை வாட்ச் ஓடாதுடா. ஒங்க மாமா எங்கயாவது கீழ கெடந்து இத எடுத்திருப்பாரு. இல்லேன்னா யாருகிட்டயாவது சுட்டுருப்பாரு".

"சரி ஒரு மூனு நாள்தான அதுக்கப்புறம் ஓடுதான்னு பாத்துக்கலாம். அது வரைக்கும் இதக் கொண்டுபோய் வீட்ல பத்திரமா வையி".

"இல்லடா... இந்த ஓடாத காலத்துல இதக் கட்டியிருக்கிறவங்க பறவை மிருகங்களோடயெல்லாம் பேசலாமாம்" "இதக் கட்டாமயுங்கூட நாம மிருகங்களோடயெல்லாம் பேசலாம். அதுகளுக்குத்தான் புரியாது. பக்கத்து ஊருல சாராயங்குடிச்சிட்டு வர்ற நம்ம ஊரு ஆளுக ஆடு, மாடு, கோழி, மரம், குத்துக்கல்லுகளோடயெல்லாம் பேசுவானுகளே. நீ பாத்ததில்லையா?"

"டேய் நானு எவ்வளவு சீரியஸாப் பேசிக்கிட்டு இருக்கேன் நீ என்னடான்னா?"

"டேய்... இது பின் நவீனத்துவத்தவிட ரெம்பக் குழப்பமா இருக்கு. இருந்தாலும் பரவாயில்ல. கையில் கட்டிட்டு மிருகங்களோடயெல்லாம் பேசு."

"நாந்தான் நாளக்கிக் காலைல பெங்களூர் போறேனே. அதுனால நீ கையில கட்டிக்க".

"நீயே கட்டிக்க. பெங்களூர்ல என்ன மிருகமே இல்லையா?"

"நான் தமிழ்ல பேசுறவன். அது அங்க இருக்குற ஆளுகளுக்கே புரியப் போறதில்ல. அவனுக்குத் தமிழும் எனக்குக் கன்னடமும் தெரியலையின்னுறதால எனக்கு வேலையில்லைன்னு சொல்லாம இருந்தா சரி".

படிப்பகம்

"ஓஹோ தமிழ்நாட்டு மிருகங்களோட பேரமட்டும்தான் "காலம்" பயன்படும்னு ஒங்க மாமா சொன்னாரே?"

"இப்ப இத நீ கட்டிக்கப் போறயா இல்லையா" நான் லீவுல அடுத்த மாசம் ஊருக்கு வரும் போதும்கூட இது உன் கையிலேயே இருக்கணும்".

"சரி...சரி கோபப்படாத... நான் கட்டிக்கிறேன்.. கொண்டா... நல்லாஇருக்கா... என்ன ஓடாத வாச்சக் கட்டியிருக்கேன்னு ஊருக்குள்ளதான் ஒரு மாதிரியாப் பேசுவாங்க.... பரவாயில்ல....ஒனக்காண்டி கேட்டுக்குறேன். நீ நல்லபடியாவேலைல சேர்ந்து உடனே லெட்டர் போடு. இப்ப வா போகலாம்.

அறிவரசு இன்னும் நல்லாத் தூங்கிட்டுதான் இருக்கான். "காலம்" மேசை மேல கெடக்குது. ஓடுதே... மணி நாலாகுது. என் வாட்ச்சுலேயும் மணி நாலு ஆகுது. ரிப்பேர் பாத்துருப்பானா? இல்லேன்னா மூனு நாளக்கி அப்புறம் அதுவா ஓடுச்சா?

"வாங்கண்ணே. எப்ப வந்தீங்க. எத்தன நாளு லீவு போட்டிருக்கிங்க?" "வாப்பா கலைச் செல்வம் எப்படி இருக்க? மத்தியானந்தே வந்தேன். ஒரு வாரம் லீவு ஆமா... நீ தானே இவனுக்குக் கையாளு. அன்னிக்கி நீ எங்க போன? இவே எதுக்கு அங்க போனான். அன்னக்கி என்னதான் நடந்துச்சு?"

"ரெண்டு பேருந்தான்னே நம்ம தெக்கூருக்குப்போனோம். அங்க ஒரு டி.வி ரிப்பேரச் சரிபண்ணிட்டு வந்துக்கிட்டு இருந்தப்ப நம்ம தமிழய்யா பள்ளீடத்து வாசல்ல நின்னுட்டுருந்தாரு. அரசண்ணே சைக்கிள்ள இருந்து எறங்கி ஐயாவுக்கு வணக்கம் வச்சுச்சு. பள்ளீடத்துல - மைக்செட்டு கட்டீருந்தாங்க. தமிழய்யா அரசண்ணங்கிட்ட பள்ளீடத்துல மந்திரி யோட மீட்டிங் இருக்கு. இருந்துட்டுப் போன்னாரு. அதோட பள்ளீடத்து டேப்பு ரிப்பேரப் பாக்கனுன்னாரு. அரசண்ணே கூட வீட்டு வரைக்கும் போயிட்டு வரேன்னதுக்கு ஐயாதான் "எதுக்குப்பா வீணா அலைச்சலு. மந்திரி அரமணி நேரத்துல போயிருவாரு. அதோட நீ போன வாரம் பள்ளிக் கூடத்துல பேசுன மனிதன் மட்டுமே மகத்தானவன்னு பேச்ச எல்லாரும் பாராட்டுனாங்க. நீ எதுக்கால நின்னா நம்ம தலைமையாசிரியரு பேசும்போது ஒன்னப் பத்தியும் பேசுவாரு. மந்திரியோட அறிமுகம் கெடச்சு அது மூலமா வேல கெடக்கவும் வாய்ப்பு இருக்குதுல்ல"ன்னாரு. இப்ப இருக்கணும்ரீக அவ்வளவுதானே இருந்திட்டுப் போறேங்கய்யான்னுட்டு அண்ணே பள்ளீடத்துக்குள்ள போச்சு".

"அரசு நம்ம பள்ளிக்குடத்துல பேசுனானா? எதுக்கு? எப்ப?

"போன வாரஞ் சனிக்கிழமை ஏதோ இலக்கியக் கூட்டம். வரவேண்டியவரு வரலின்னு அண்ணன வந்து பேசச் சொல்லி நம்ம தமிழய்யாதான் ஒரு தாள்ள எழுதிக் குடுத்து உட்டாக. நாங்க ரெண்டு பேருந்தான் போனோம். அண்ணக்கி அண்ணே பேசுனதக் கூட கேசட்டுல பதிஞ்சு குடுத்தாக மந்திரி வந்த அன்னக்கிக் காலைல கூட மைக் செட்டுல அண்ணே பேசுனதப் போட்டாகளாம்.

www.padippakam.com

அரசண்ணனுக்குக் குடுத்த கேசட்டு கூட இங்கதானே.... இந்தா இதுதான்.

"சரி அப்புற எப்படி போலீஸ் பேசுன்னு...?" "மந்திரி வந்து வரவேற்பு மாலை மரியாதை எல்லாம் முடிஞ்சு மந்திரி பேசுனப்ப நம்ம நாட்டுல எல்லாப்புள்ளைகளும் நல்லா இருக்கு நல்லா படிங்கன்னு சொல்லிக்கிட்டு இருந்தப்ப நம்ம பெட்டிக்கூட கந்தன் மகன் மந்திரிக்கி சோடா ஒடச்சு குடுத்தான். இதப் பாத்ததும் அரசண்ணே கொஞ்சம் பெலக்காவே சிரிச்சிச்சு."

"கந்தன் மகன் யாரு? சின்னவனா? பெரியவனா?" "அதாண்ணே எட்டுவயசுல ஒருபய. சின்னவே, கந்தனுக்கு ஒத்தாசையா கூட இருப்பான்ல அவன்" அவன்" "எதுக்கு அங்க வந்தா?

"அவங்கதானே நம்ம ஊருல கொக்கக்கோலா பேக் பைப்பர் சோடால்லாம் வச்சுருக்கானுக. பள்ளீடத்துல சோடா கொண்டு வந்து வச்சுட்டு கந்தண்ணே வீட்டுக்குப் போயிட்டாரு. மந்திரி செருமுனதும் மேடையில இருந்த யாரோ சோடான்னுருக்காக. பய ஒடனே ஒரு சோடாவ ஒடச்சுக்கிட்டு மேடைக்கிப் பாஞ்சுட்டான்."

"சரி அரசு சிரிச்சதும் என்னாச்சு?"

"மேடைக்கி முன்னால முதல்வரிசைல உக்காந்திருந்ததால மந்திரி அரசண்ணே சிரிச்சதப் பாத்துட்டாரு. நானு சைடுல நின்னுக்கிட்டுப் பாத்தேன். அரசண்ணனுக்கு சிரிப்ப அடக்க முடியல. ஒடனே மந்திரி கிறுக்கனாட்டம் ஏன்டா சிரிக்கிறயின்னாரு. அரசண்ணே சிரிப்ப அடக்க முயற்சி பண்ணிக்கிட்டே "மன்னிச்சிருங்கய்யா ஒங்களுக்கு சோடா குடுத்த பையன் பள்ளிக் குடத்துல படிக்கிறவே இல்லீங்க. பெட்டிக்கடக்காரப் பையேங்க"ன்னுச்சு அரசண்ணே. ரெம்ப மரியாதையா எந்திரிச்சு நின்னுதான் பதில் சொல்லுச்சு. அதுக்குள்ளயே போலீஸ்காரக அண்ணங்கிட்ட வந்துட்டாக. "இந்த ஒருத்தன் படிக்கலைன்னா யாரும் படிக்கலைன்னு அர்த்தமா"ன்னாரு. "அப்படி இல்லீங்க எங்க ஊர்ல பாதிப்புள்ளைங்க பள்ளிக் குடத்துக்கு வர்றதுல்ல. எங்க இளைஞர் மன்றத்துல கூட புள்ளைகளப் பள்ளிக்குடத்துல சேக்குறதுக்கு ரெம்ப முயற்சி பண்ணிக்கிட்டுதான் இருக்கோம்"ன்னு அண்ணே சொல்லுச்சு. அதுக்குள்ள போலிஸ்காரக அண்ணனை உட்காரச் சொல்லி மிரட்டலாப் பாத்தாக. ஒரு போலிசு அண்ணன்கிட்ட போயி "அதெல்லாம் மனுவா எழுதிக்குடு இப்ப உக்காருன்னாரு" இதுக்கு எடையில மந்திரி அரசண்ணனுக்கு இந்த ஊரப்பத்தி எதுவுமே தெரியாதுன்னும், அரசாங்க ரெக்கார்டுப்படி 100 சதவீதம் பிள்ளைங்க படிக்கிற ஊர்ல இது ஒன்னுன்னும் சொன்னாரு. "அரசாங்க ரெக்கார்டு அப்படித்தான் இருக்கும்னு" மொணங்கிக்கிட்டே அண்ணே பேசாம உக்காந்திருச்சு "என்னடா முனுமுனுக்குற. அரசாங்கத்தப் பத்தி ஒனக்கு என்னடா தெரியும். பெரிய மயிராண்டியாட்டம பேச வந்துட்ட என்னமோ இளைஞர் மன்றம்ன்யே அந்தத் திமிர்லதானே பேசுற. இப்படிப்பட்ட நாய்கள வளர விட்டா ஒரு நாளு அரசாங்கத்துக்கு எதிரா புரட்சி அது இதுன்னு பண்ணுவீங்கடான்"னாரு. போலீசு அவுக வேலைய ஆரம்பிச்சுட்டாக. நானு தமிழய்யா. ஹெட்மாஸ்டரு. இன்னுஞ்

படிப்பகம்

www.padippakam.com

செல வாத்தியாருக எல்லாரும் அரசண்ணங்கிட்ட போக முந்தியே அடி வெளுத்து ஜீப்புல ஏத்தி டேசனுக்கு அனுப்பிட்டாங்கன. பெறகு நானு போயி நம்ம படிப்பகத்து ஆளுகட்ட சொன்னேன். இதக்கு எடையில நம்ம பள்ளீடத்து வாத்தியாரு நாலைஞ்சு பேரு டேசனுக்குப் போயி அரசண்ணன விட்டுடச் சொன்னதுக்கு "ஓங்க சோளியப் பாருங்கப்யா. பள்ளீடத்துக்கு மந்திரியக் கூப்புட்டுட்டு கலாட்டா பன்றதுக்கு ஆளும் ஏற்பாடு பண்ணீங்கன்னு ஓங்க நாலு பேரையும் புடிச்சு உள்ள வச்சுக்குவோம் இனிமே இந்த விஷயமா இந்தப் பக்கமே வரக்கூடாது"ன்னு மரியாதையில்லாமப் பேசி அனுப்பிட்டாங்க அப்புறமா..."

"அப்புறமா ஜாமீன்ல எடுத்ததெல்லாம் அம்மா சொன்னாங்க. நீ போயி குளிச்சிட்டு வா. போற வழியில வக்கீல வரச் சொல்லிட்டுப்போ. அந்தக் கேசட்டப் போட்டு விட்டுட்டுப் போ. முதல்ல இருந்து போடு.

... **தலைவர்** உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம். நான் படித்த பள்ளியிலேயே நான் பேச முடிந்ததில் மகிழ்ச்சியே. பேச்சின் தலைப்பை என் பொறுப்பில் விட்ட ஆசிரியர்களுக்கு நன்றி.

"மனிதன் மட்டுமே மகத்தானவன்" என்பதை இன்றைய தலைப்பாகிக் கொள்ளலாம் என நினைக்கிறேன். என்ன வச்சுக்கலாமா?.................. (வச்ச்ச்சுசுசுக்க்க்கககலாலாலாம்).... சரி..... இத சாதாரணமா ஒரு உண்மைக்கதையைச் சொல்லி உணர்த்திட்டு நிறுத்திரலான்னு நெனக்கிறேன்.

கொஞ்ச நாளக்கி முன்னால என்னோட நண்பன்.... இப்ப பெங்களூர்ல இருக்கான்... அவன் இந்தக் கடிகாரத்த என்கிட்ட கொடுத்து இதோட பேரு "காலம்" இதக்கட்டிக்கிட்ட ஒரு மூனு நாளக்கி மிருகங்களோடயெல்லாம் பேசலாமுன்னான். நான் கூட சரி பயலுக்கு ஏதோ ஆயிருச்சு பயந்த கோளாறா. பைத்தியமான்னு பாக்கனுன்னு நெனச்சேன். இருந்தாலும் ஊருக்குப் போறப்ப நாம ஒன்னு கெடக்க ஒன்னு சொல்லி வைக்க வேணான்னுட்டு கடிகாரத்த வாங்கிக்கிட்டு பஸ்ஸேத்தி அனுப்பிட்டேன்.

மறுநாள் காத்தால பல்லுக்குச்சிய ஒடிச்சு மெண்டு தேச்சுக்கிட்டே பம்பு செட்டுக் கெணத்துக்குப் போனேன். மத்தியானக் கரண்டு. மோட்ரப் போட முடியாது. தொட்டியில கெடக்குற தண்ணியில வாயக் கொப்புளிக்க முடியுமா? அதனால படி வழியா கெணத்துல இறங்கி ஒரு செறங்க தண்ணிய எடுத்து வாயில வச்சேன். கெனத்துத் தண்ணியில மெதந்த தென்னை நெத்து மேல உக்காந்திருந்த தவள என்னய மொறைச்சுப் பாக்குற மாதிரி இருந்துச்சு. எனக்குப் பயமாப் போச்சு. என்னதான் தைரியமுன்னாலும் அதெல்லாம் கூட்டத்துலதான். கெணத்துக்குள்ள...சரியா விடியாத நேரத்துல...ஒத்தையில... ஒரு தவள நம்மளப் பாத்து மொறைச்சா எப்படி இருக்கும், தவள கடிச்சு செத்ததா இது வரைக்கும் எந்தச் சரித்திரமும் இல்ல... நானு சரித்திரமாயிரக் கூடாதுல்ல... பயம்...

படிப்பகம்

www.padippakam.com

எந்திரிச்சு நின்னுக்கிட்டேன்.... ஓடுறதுக்கு வசதியா தான்... கொஞ்சம் தைரியம் வந்த மாதிரி இருந்துச்சு... சுத்தி முத்திப் பாத்தேன். கல்லு கில்லு ஒன்னும் எம்புடல. வாயில இருந்த தண்ணியக் கொப்புளிச்சு இன்னொரு படி மேல ஏறிக்கிட்டு குறிபாத்து தவள மேவ துப்புனேன். அது உடனே. "க்வக்... "க்வக்..." கின்னுச்சு.

பொறங்கையால வாயத் தொடச்சப்ப தான். அடடா "காலம்" நம்ம கையில இருக்கு அதான். அந்தத் தவள நம்மளோட பேச முயற்சி பன்னுதுன்னு புரிஞ்சது. ஒடனே நானும், தவள மாதிரி "க்வக்....க்வக்...க்வக்..." மறுபடி தவளையும் "க்வக்...க்வக்...". இப்படி தவளயும் மாறி மாறி "வ்கக்....க்வக்....க்வக்...." ஒரே எரிச்சலாயிருச்சு. "என்னடா ஒரு எழவும் புரியலைன்னு நானா சொல்லிக்கிட்டேன்". "என்ன புரியலைங்கிற" கெணத்துக்குள்ள இருந்து சத்தம். ஒரே தாவுல ஏழு படி ஏறி நின்னேன். கெணத்துக்குள உத்துப்பார்த்தேன். "என்ன அப்படி பார்க்கிற" நான்தான் பேசுனேன். அட தவள தமிழ் பேசுது.இங்க மக்கள்தான் தமிழ் பேச தயங்குறாங்க.இது தெரியாம நாம பாட்டுக்கு அது மொழியில பேச முயற்சி பன்னனுமே. எவ்வளவு கேணத்தனம். சரிதான் மேல போயி வழக்கமான ஆளுகளோட பேசுறத விட ஒரு மாறுதலுக்காண்டி தவளயோட கொஞ்ச நேரம் பேசுவமே. கொஞ்சம் தைரியம் வந்துச்சு. கீழப்படி வரைக்கும் இறங்கி குத்துக்காலு வச்சு உக்காந்துக்கிட்டு 'என்ன தவளையாரே சௌக்கியமா?'ன்னேன். 'நல்லா இருக்கே'ன்னுச்சு. அடுத்து என்ன பேசுறதுன்னு புரியல. தவளயோட இலக்கியம் பேச முடியுமா?சரி ஏதாவது கேட்டு வப்பமேன்னுட்டு 'கெணத்துல இருக்குறது வசதியா இருக்கா?'ன்னேன்.'எனக் கென்ன கொறைச்சல்'ன்னது.'உங்களுக்கு கொறைச்சல் ஒன்னும் இல்ல.அடுத்த உலக அழகியாக்கூட தேர்வு செய்யுற அளவுக்கு அழகாவும், அறிவாவும் அதோட ஆடையில்லாமையும் இருக்கீங்க.அந்த அர்த்தத்துல கேக்கல.இந்தக் கெணத்துல இருக்குறத விட கண்மாய், குளம், ஊரணி இப்புடி பெரிய எடத்துல இருந்தா இன்னும் நல்லா இருப்பீங்களே. நெறைய நண்பர்கள்லாம் கெடைப்பாங்களேன்றதுக்காகக் கேட்டேன்'னேன்.'என்னது கண்மாய்,குளம்,ஊரணியா அப்புடீனா'ன்னுச்சு. அதெல்லாம் தண்ணிகெடக்குற இடமுன்னதுக்கு'ஓஹோ இங்க இருந்து எடுக்குற தண்ணிய நீங்க ஊத்தி வக்கிற பாத்திரமா'ன்னு கேட்டுச்சு.எனக்கு பெரியமானக் கேடாப் போச்சு. சரி அதுக்கு எப்புடியாவது புரிய வச்சுறதுன்னு முடிவு பண்ணி கண்மாய்னா அங்க நெறைய தண்ணி இருக்கும்.கடல் இருக்குல்ல அத மாதிரி சின்னதா இருக்கும்.ஆனா அலையில்லாம நல்ல தண்ணியா இருக்கும். 'கடலா அப்புடீன்னா'ன்னச்சு.எனக்கு தலையே சுத்தீருச்சு.இதுக்கு எப்புடி வெளக்கம் சொல்றது.நம்மளே கடல மேப்புலதான் அதிகமாப் பாக்குறோம்.இப்ப நீங்கன்னா உலகப்படத்துல நீல நிறத்துலஇருக்குறதெல்லாம் கடல்னு சொல்லீரலாம். ஆனா, தவளைகிட்ட எப்புடி சொல்றது சரி முயற்சி பண்ணலாம். "கடல்ன்னா அங்க நெறைய உப்புத்தண்ணி... அய்யய்யோ அப்புறம் நீ உப்பா அப்புடீன்னான்னு கேட்டு பெறகு நானு வெளக்கஞ் சொல்லி குருடனுக்கு பாலு விக்கி குழந்த செத்தது புரிஞ்சது மாதிரி புரிஞ்சிறப் போகுது. கடல்னா அங்க நெறைய தண்ணி

படிப்பகம்

www.padippakam.com

இருக்கும்'ன்னேன். ஆமா பாலு விக்கி குழந்த செத்த கதை தெரியுமா? தெரியாதா? சொல்றேன். தவள கொஞ்ச நேரம் காத்திருக்கட்டும். ஒரு பிறவிக்குருடன் கிட்ட அவன் நண்பன் ஒருத்தே... அவனுக்குக் கண்ணு தெரியும். 'பாலுவிக்கி குழந்த ஒன்னு செத்துப்போச்சு'ன்னு சொன்னான். குருடன் பாலு எப்புடி இருக்கும்னதும் இவே வெள்ளையா இருக்குமுன்னான். குருடன் வெள்ள எப்புடி இருக்குமுன்னான். இவன்தான் பிறவிக் குருடனே. வெள்ள தெரியுமா? சிகப்பு தெரியுமா? எல்லாம் ஒரே கருப்பு தானே? அவே நண்பன் வெள்ளைன்னா கொக்கு மாதிரி வெள்ளைன்னான். குருடன் ஒடனே கொக்கு எப்படி இருக்கும்'னான். குருடன் ஒடனே. ஒரு கைய கொக்கு மாதிரி வளச்சுப் புடிச்சுக்கிட்டு குருடனத் தடவிப் பாக்கச் சொன்னான். குருடனும் தடவிப் பாத்துப் புரிஞ்சுக்கிட்டு'. இதப்போயி குழந்தைக்கிக் குடுத்தா விக்கிச் சாகாம என்ன பண்ணும்'னு கேட்டான்.

சரி இப்ப தவளயப் பாப்போம். கெணத்துல இருந்த தண்ணியில ஒரு தவ்வு தவ்விக் காட்டி 'கடல் இவ்வளவு பெருசா'ன்னு தவள கேட்டுச்சு. இல்லைன்னேன். பெறகு அரக்கெணறு முக்காக் கெணறு. முழுக் கெணறுன்னு தாவிக் காட்டுச்சு, நானு 'நீங்க நெனக்கிற மாதிரி இல்ல கடல்ன்றது ரெம்ப பெருசு. லட்சம் கெணறு சேந்தாலும் ஒரு கடலாக முடியாது'ன்னேன். நீ பொய் சொல்ற'யின்னு சொல்லீட்டு வேற எங்கயுமே தண்ணி இல்லையின்னும் கெணத்துல இருக்குற தண்ணி எப்புடி வெளிய போனாலும் திரும்பவும் சொட்டுச் சொட்டா திரும்ப கெணத்துக்கே வந்துருமுன்னும் சொல்லீருச்சு. எனக்குக் கடுப்பாயி அடச்சீ சரியான கெணத்துத் தவளாயிருக்கியே'ன்னு சொல்லிக்கிட்டே நானு வெளிய வந்துட்டேன்.

மறுநாள் வண்டியில பூட்டியிருந்த ஒரு குதுரயப் பாத்தேன். அதுக்கு சைடுல பாக்கவிடாம கண்ணுக்கிட்ட கடிவாளமா... அது என்னது... சரி விடுங்க. கடிவாளம்னே வச்சுக்குவோம். அந்தக் குதுரயோட பேசிப் பாக்கலாம்னு நெனச்சு அது பக்கத்துல போனேன். குதுர கனச்சுச்சி. அந்தக் கனப்பு எனக்கு சிரிப்பு மாதிரி கேட்டுச்சு. 'குதிரை அண்ணே உங்களோட கொஞ்சம் பேசனும்'னேன். 'என்னோட பேச உனக்கு என்ன இருக்கு'ன்னுச்சு. 'அது இல்லண்ணே ஒங்கிட்ட ஒங்க வாழ்க்கயப் பத்தி சின்னதா ஒரு பேட்டி எடுக்கலாமுன்னுதான் வந்தேன்'னேன். பேட்டியா அது என்ன பெரிய சைசுப் பெட்டியா'ன்னுச்சு. 'பெட்டி இல்லண்ணே இது பேட்டி. வயலும் வாழ்வும் மாதிரி நானு கேள்வி கேப்பேன். நீங்க பதில் சொல்றதுன்னா சொல்லலாம். இல்லேண்ணா பதிலயும் நானே சொன்னதும் நீங்க ஆமா... ஆமான்னு... மட்டும் சொல்லலாம்'னேன். 'என்ன சொல்ற மொதல்ல என்னமே பேட்டியின்ன. இப்ப என்னடான்னா வயலும் வாழும்ன்ற'ன்னுச்சி. 'அய்யோ அது வயலும் வாழ்வும். அது பலநேரம் வெள்ளாம பண்ற எங்களுக்கும் புரியிறதில்ல. நடத்துற அவங்களுக்கும் புரியறதில்ல. இடையில உங்களுக்கு எங்க புரியப்போகுது. அதுசரி விடுங்க. ஆமா.. இப்ப நீங்க எங்க போறீங்க'ன்னேன். 'லாயத்துக்கு'ன்னுச்சி.

படிப்பகம்

கெணத்துத் தவளக்கித்தான் ஒன்னும் தெரியல இந்த வண்டிக்குதிரைக்காவது ஏதாவது தெரியுமான்னு பாக்கலான்னு நெனச்சு "ஒங்களுக்கு என்னல்லாம் தெரியும்'னு கேட்டேன். தார்ரோடு, மண்ரோடு, கல்ரோடு, சிமிண்ரோடு இப்படி எல்லா ரோடும் தெரியும். லாடம் கட்டிட்டு சும்மா டக்கு டக்குன்னு சிமிண் ரோடுல நடந்தா நடக்க நடக்க ஆசையா இருக்கும். லாடமில்லாம வெயில் நேரத்துல தார் ரோட்டுல கடந்தா காலெல்லாம் புண்ணாயிரும். செலநேரம் கல்ல மட்டும் பரப்பீட்டு ரோடு போட்டோம்னு நெனச்சு போயிடுவாங்க. காலு பெரண்டுகிட்டு சுளுக்கிரும். கல்லு குத்தியும் காலு புண்ணாயிரும்'ன்னுச்சி. 'ரோடெல்லாம் தெரியும் சரி, ரோட்டுக்கு ரெண்டு பக்கமும் கட்டடம் இருக்குமே அதுல அடிச்சிருக்கிற கலர்ல ஒங்களுக்கு எந்தக் கலர் ரெம்பப் புடிக்கும்'ன்னு கேட்டேன். இந்தக் கேள்வி ஏன் கேட்டேன்னா, பொதுவா மிருகங்கல்லாம் நிறக்குருடு. அதாவது கருப்பு வெள்ளை டிவியில நாம படம் பாக்குற கலர்லதான் அதுகளுக்கு எல்லாம் தெரியுமின்னுவாங்க. அது சரிதானான்னு தெரிஞ்சுக்கிறதுக்காக கேட்டேன். ஆனா குதிரை சொன்ன பதில் என்னத் தூக்கி வாரிப் போட்டுருச்சி. 'என்னது கட்டடமா? இருக்னா'ன்னுச்சி. 'நீங்க கட்டடமே பாத்ததில்லையான்னுதுக்கு 'என்னோட லாயம். அப்புறம் அண்ணாச்சி வீடு. போக நாலெஞ்சு சுவருதானே இருக்கு'ன்னுச்சி. 'பார்த்ததில்லைன்னு சொல்லுங்க நீங்க பாட்டுக்கு அவ்வளவு தான்னா என்ன அர்த்தம்'னேன். ஒடனெ குதுர ரெம்பக் கோவமா. "ஒனக்கு என்ன தெரியும். நீ இங்கனையே சுத்துற. நானு எத்தனை ரோடு சுத்துறெந்தெரியுமா? எல்லாம் தெரிஞ்ச மாதிரி வந்திட்டான். போடா'ன்னுருச்சி. அப்புறம் என்னத்த அதுங்ககிட்ட பேசன்னுட்டு நானும் கெளம்பீட்டேன். கெணத்துத் தவளையோட நெலமைய விட வண்டிக்குதுரயோட நெலம ரெம்ப மோசமாவுல்ல இருக்கு. மொத்தத்தில ரெண்டுக்குமே ஒண்ணும் தெரியல.

அடுத்த நாள் எந்த மிருகத்தோட பேசலாம்னு கெளம்புற நேரம் பார்த்து எங்க ஆத்தா செட்டியாருக்கிட்ட போயி காப்பிடி எண்ண வாங்கியாரச் சொல்லீருச்சி. சரி வாங்கீட்டே போயிரலாமுன்னு செட்டியாரு வீட்டுக்குப் போனா அவரு வீட்ல இல்லை. செக்கடியில இருப்பாருன்னு பக்கத்து வீட்டுப்பய சொன்னான். சரி ஒரு எட்டு அப்படியே செக்கடிக்குப் போயிட்டு வந்துரலாமுன்னு போனா. அங்கேயும் செட்டியாரக் காணாம். ஆனா, செக்குல எள்ளு கெடக்க மாடுரெண்டும் செக்கச் சுத்திக்கிட்டு இருந்துச்சு. நானு அப்படியே அசந்து போயிட்டேன். அடடா கண்டேன் இருபுத்திசாலி மிருகங்களைன்னு முடிவு பண்ணி அதுகளோட பேச என்னய நானே தயார் பண்ணிக்கிட்டேன். ஒரு ஆள் நின்னு தார் வச்சாலே வேல பாக்காத ஆளுகளப் பாத்துப் பாத்துப் பழகிப்போன நமக்கு தாரும் இல்லாம ஆளும் இல்லாம தன்னோட வேலயத்தானே செய்யுற மாடுகளோட பேச முன்தயாரிப்பில்லாம முடியுமா என்ன? இப்படிப்பட்ட மிருகங்கள நம்ம நண்பர்களாகவே நினைப்போமே. ஏன்னா ஒரு வெளி நாட்டு அறிஞர் உன் நண்பர்களைப்பற்றிச் சொல் நான் உன்னைப் பற்றி சொல்கின்றேன்னாராம். நல்லவிதமா நாம சொல்லிக்கிற மாதிரி இந்த ரெண்டு நண்பர்களும் இருக்கட்டுமே.

www.padippakam.com

நண்பர்கட்டப் போயி 'வணக்கம் நண்பர்களே'ன்னேன். நண்பர்களும்..வணக்கம் சொன்னாக. ஆனா நிற்காம நடந்துக்கிட்டே இருந்தாக. அடடா, தொழில் மேல என்னா அக்கற பேசும்போது கூட வேலைய நிறுத்தலயே. நானும் நடந்துக்கிட்டே அவுகக்கிட்டயும் நம்ம வழக்கமான கேள்விகள எடுத்து உட்டேன். விடையாக் கெடச்சதெல்லாம் வழக்கம் போல சொத்தைதான். அவுகளப் போயி நண்பர்களா நெனச்சமேன்னு ஒரே மானக்கேடாப் போச்சு. அவுகளுக்கு சுத்துற வட்டத்தையும் கட்டுற கொட்டத்தையும் திண்ணுற தீவனத்தையும் தள்ளுற சாணியையும் கழுத்துப் புண்ணையும் அதக் கொத்துற காக்கையையும் மொய்க்கிற ஈயயும், குத்துற தார்க்கம்பயும் கத்துற செட்டியார் பொண்டாட்டியையும் தவிர வேற ஒன்னும் தெரியல.

மனுசன் ஒரு சமூக விலங்குன்னு சொல்றாங்க. சமூகமே ஒரே இன விலங்கோ இல்ல தனித்தனியா வேற வேற விலங்கோ மனிதன் அளவுக்கு மகத்தான ஜீவராசி வேற ஏதாவது இந்த உலகத்துல இருக்கா? எதுவுமே தெரியாத கெணத்துத் தவள, வண்டிக்குதுர, செக்குமாடுகள விட மனிதன் உயர்ந்தவன். மகத்தானவன்தானே. அதனால்தான் சொல்ல வந்தேன். மனிதன் மட்டுமே மகத்தானவன் என்று. மீண்டும் சந்திப்போம் என்ற நம்பிக்கையில்...

அடுத்ததாக நன்றி கூறுவதற்காக......டக்...

"**வாப்பா** பெங்களூர்ல இருந்து எப்ப வந்த. வேலையெல்லாம் எப்படி இருக்கு."

"வாங்க சார்.மதியந்தா வந்தேன்.அங்க எல்லாம் நல்லாதான் இருக்கு. இங்கதான் நெலம ஒன்னும் சீருல்லாம இருக்கு."

"அட ஏம்ப்பா நீ வேற வீணாப் பயப்புடுற. மந்திரிய எதுத்துப் பேசுனதா நெனச்சு இவனப் போட்டு அடிச்சுட்டாங்க. நீ பயப்புடுற மாதிரி ஒன்னுமில்ல. ஜாமீன்ல எடுத்தாச்சுல்ல இனிமே அடிக்க என்ன தொடக்கூட முடியாது.நாம கோர்ட்டுல பாத்துப்பலாம."

"பேப்பர்ல ஏதோ கத்தி,ஆயுதம்,வெடிகுண்டு அப்புடி இப்படீன்னு போட்டுருந்துச்சே சார்".

"அது பெரிய ஜோக். இவே ரேடியோ ரிப்பேர்,டி.வி.ரிப்பேர்னு பாக்குறவே எலக்ட்ரிக் வேல,எலக்ட்ரானிக் வேலபாக்கறவுங்க எல்லார் பையுலயும் இருக்குற மாதிரி அவெ சட்டப் பையுலயும் வயர் சீவுற மூன்றுபா கத்தி ஒன்னும், டெஜ்டரும் இருந்துச்சு. இது ரெண்டயும் ஆயுதம்னு எழுதிட்டாங்க. நாம கோர்ட்டுல டுலஸ்க்கும்,வெய்பனக்கும் இருக்குற வித்தியாசத்தச் சொல்லிக்கிறலாம்".

"ஏதோ டைம் பாம் தயாரிக்கப் பயன்படுற கருவின்னு போட்டுருந்துச்சே?"

படிப்பகம்

"அது அவே டையோடு,சர்க்யூட் டெஸ்ட் பன்ற மல்ட்டி மீட்டர். போலீஸ்ல அது என்னன்னு தெரிஞ்சோ தெரியாமயோ,டைம்பாம் தயாரிக்கிற கருவின்னு எழுதிட்டாங்க. நானும் ஒன்னு சொல்லல. அதெல்லாங் கோர்ட்டுல ஒப்படச்சுருவாங்க.நாம அங்க வௌக்கஞ் சொன்னாப் போதும்".

"நீங்க வக்கீலு அதுனால கோட்டுல பாத்துக்கலாம்.கோட்டுல பாத்துக்கலான்றீங்க. ஆனா,எனக்கில்ல வயித்துல புளியக் கரக்கிது. இவே ஏன் அங்கயெல்லாம் போனானா?"

"நானு வக்கீல மட்டுமில்லப்பா.உங்க வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒரு அண்ணனா என்னயப் பாருங்க.நீ பயப்புடுற மாதிரி ஏதும் நடக்கப் போறதில்ல. நீ ஊருல இருந்திருந்தா நீங்க ரெண்டுபேரும் சேந்து இந்தக் கேசுல மாட்டியிருப்பீங்க".

"நெசந்தா"

"சரி நாளக்கிக் கோர்ட் முடிஞ்சதும் வந்து பாக்குறேன்"

"**இந்தாப்பா** டீ சாப்புடு.அவனயும் எழுப்பி டீ குடு"

"சரி ஆத்தா...டேய்...அரசு...அரசு...எந்திரி...எந்திரிடா...இந்தா டீ சாப்புடு"

"வாடா எப்ப வந்த?"

"இப்ப தான்"

"என்ன திடீர்னு?"

"பேப்பர் பாத்துட்டு வந்தே"

"ச்ச... பேப்பர்ல போட்டோ போடாம உட்டுட்டாங்களே".

"ம்... போடுறமாதிரி மூஞ்சி இல்லன்னு உட்டுட்டாங்களாம். என்னடா இதெல்லாம்?"

"சொல்லியிருப்பாங்கல்ல. மந்திரி எனக்கு வேல வாங்கித் தருவாருன்னு தமிழய்யா நெனச்சாரு. மந்திரியால எனக்கு பட்டம் மட்டுந்தா தர முடிஞ்சது. 'தீவிரவாதி'."

"சரி அத தவிடு மத்தியானம் வந்ததிலயிருந்து எல்லாருட்டயும் இதே பேச்சுதான். நம்ம பள்ளிகுடத்துல நீ பேசுன "மனிதன் மட்டுமே மகத்தானவன்" கேட்டேன். நல்லா பேசியிருக்கடா. பேச்சுக்கேட்டதும் மனிதன் மட்டுமே மகத்தானவன்ற உணர்வு வருது"

"........."

"என்னடா பதிலயே காணோ?"

"மனிதன் மட்டுமே மகத்தானவன்றது பொய். நல்லகெட்டித்தார்ப்பாயில வடிகட்டுன மட்டமான பொய்".

"ஏய்.... ஏன்டா இவ்வளவு கத்துற.. உனக்கு என்ன ஆச்சு.... இந்த சத்தந்தானே ஒன்னய சிக்கல்ல மாட்டி விட்டுருது. என்னாச்சு?"

"........."

www.padippakam.com

"என்னடா அழுகுற?" என்ன ஆச்சு? யாரும் எதும் சொன்னாங்களா? ஆத்தா ஏதும் திட்டுச்சா? என்னடா?"

".... சொல்றேன்... சொல்றேன்... நான் பள்ளிக்குடத்துல பேசுனதுல நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மை. நீ தந்த காலம் ஓடாத வரையில் நானு மிருகங்களோட எல்லாம் பேசுனேன். காலம் எனக்கு நெறைய கத்துக்குடுத்துச்சு. அப்புற அது ஓட ஆரம்பிச்சுருச்சு. நான் பள்ளிக்குடத்துல பேசுன நாலாம் நாளு இடைக்காட்டுப் புரத்துக்கு ஒரு வேலயாப போயிட்டு திரும்பி வந்துக்கிட்டு இருந்தேன். அப்ப ஒரு பொம்பளப்புள்ள, வயசு ஒன்பது இல்ல பத்து இருக்கும்.கையில தூக்குச் சட்டியோட ஓடியாந்து 'அண்ணே சைக்கிள்ல வரவா'ன்னுச்சு. கேரியர் இல்லாத வண்டி.'சரி வா'ன்னு முன்னால உட்காரவச்சு பேசிகிட்டே வந்தேன். அந்தப்புள்ள தீப்பெட்டி ஆபீசுல வேல பாக்குது.பள்ளிக்குடம் போனதில்ல. தீப்பெட்டி ஆபீசுல போடுற சினிமாப் பாட்டெல்லாம் மனப்பாடமா ஒப்பிக்கிது. அவ்வளவு ஞாபக சக்தி. விளையாட்டுன்னு கேட்டா 'கணக்கப் புள்ளக்கி ஏப்புக்காட்டி வெளையாடுவோம். ஆபீசரு வந்தா ஒளிஞ்சு விளையாடுவம்'முனு சிரிக்கிறது. அவ்வளவு குறும்பு.'அடிப்பெட்டி மேப்பெட்டி ஒட்டத் தெரியும்,டஜன் மடிப்பேன்,பண்ட்ரோல் ஒட்டுவேன் இப்ப குச்சி உருவப் பழகீட்டு இருக்கேன்'னுச்சு. லீவு நாள்ல ரெண்டு சினிமா பாக்குமாம். சினிமா வேல இத விட்டா அந்தப் புள்ளக்கி ஒன்னுந்தெரியலயின்றது விட அதுதான் வாழ்க்கயின்னு நெனக்கிது.

அந்தக் கெணத்துத்தவளைக்கும், வண்டிக்குதுரைக்கும், செக்கு மாடுகளுக்கும், இந்தப் புள்ளக்கும் எந்த வித்தியாசமும் இருக்குறதா எனக்குத் தெரியல. இப்புடி தீப்பட்டி ஆபீசுல, பயர்ஒர்க்ஸ்ல, ஒர்க் ஷாப்புல, செங்கச்சூலையில, கல்குவரியில, ஹோட்டல்ல, ரைஸ் மில்லுல இவ்வள ஏன் கவர்மண்டு போடுற ரோட்டு வேலயிலயும், குடும்பம் குடும்பமா ஊரு ஊரா டெலிபோன் கேபிள் போடுறதுக்கு குழி தோண்டுறவங்களோட சேர்ந்து குழி தோண்டுறபுள்ளகளாவும் நெறயப் புள்ளைங்க ஒன்னுந் தெரியாம மண்ணாப் போயிக்கிட்டு இருக்கும் போது "முழு" எழுத்தறிவு, எல்லாரும் படிச்சவுங்க' இப்படிபட்ட பொய்யெல்லாம் என்னால ஜீரணிக்க முடியலடா? இப்ப..... இப்பச் சொல்லுடா மனிதன் மட்டுமே மகத்தானவன்றது......"

"அழாதடா.... அரசு... அழாத.... அழாத.... இரு கதவச் சாத்திட்டு வரே.... ஒரு சிகரெட் பிடி.... அழுகய நிறுத்துடா......"

கல்லூரிக்குள்ளிருந்தும் கலை, இலக்கியம், சமூகம் தொடர்பாக மாதா மாதம் ஒலிக்கும்

சிலம்பம்

பண்பாடு மக்கள் தொடர்பகம்,
லொயோலா கல்லூரி
சென்னை

தொலை நகல் : 8226260
ஆண்டு சந்தா :ரு. 50/-

www.padippakam.com

அது அதனின் ஆதிக்கம்

(பெண் 1 உம் பெண் 2 உம் பெண் 3 ஐப் பார்த்து......)

பெண் 1 : *தவித்துக் கொண்டே இரு.*
தவிப்பு
தவிப்பு
இருக்கணும் பெண்ணுக்கு

பெண் 2 : *கோபம் குணம்*
அச்சம் வெட்கம்
எதாகிலும்
தவிப்பு.... தவிப்பு.
இருக்கணும் பெண்ணுக்கு

இருவரும் : *இருக்கணும் பெண்ணுக்கு*
இருந்தாயானால்தான் அவர் நிச்சயிக்கிறார்
பெண்ணாய்
உன்னை

பெண் 3 : *உங்கள் தவிப்பு பிரதிபலிப்பு தப்பு*
தப்பு
கேளுங்கள்...

பெண் 1 : *(இடைமறித்து)*
போதும்
என்னைப்பார்...
.... கேள்.... ஆக
எப்போதும் தவித்திரு
தாபத்திரு.

பெண் 2 : *தாபத்தில்தான் தவிப்பு இருக்கும்*
போகட்டும்
சோசியலிஸம் பேசு
('ச'வா)
('ஸ'வா)

பெண் 1 : *எப்படியோ ஒரு இஸம் அவ்வளவு தான்*

பெண் 2 : *சரியர்ஸம் என்றெல்லாம் பிதற்று*
அவலம் அவிழ்த்து ஆணவமாய் போராடு
அப்போதும் தவித்திரு.

பெண் 1 : *ஆஹா ஆஹா*
பெண்ணே! பெண்ணே !

படிப்பகம்

பெண் 2 : படிமங்கள் யாத்து
ரியலிஸம் என்றெல்லாம் சாற்று

பெண் 1 : ஆகட்டும் ஆகட்டும்

பெண் 2 : ஓவியம் தீட்டு காவியம் மாற்று

பெண் 3 : (இடை மறித்து)
அப்போதும் தவிப்பு தானா?

பெண் 2 : அப்போதும் தவித்திரு
மாநாடு நடத்து மகளிருக்கு போதித்து

பெண் 1 : வாழ்க ! வாழ்க !

பெண் 2 : போதித்து மலடாக்கு ஆகு
ஆதிக்கம் சுட்டிக் காட்டி
ஆகு ஆகு என்று அலியாக்கு

பெண் 3 : போதும் போதும்
கேளு....
உன்னை
அறிவு ஜீவி என்றும்
ஜீவித்துவாய் என்றும்
அணைய அணைய
அணைக்கிறான் அங்கொருவன்
இங்கொருவன்

பெண் 2 : அப்படியும் இருக்கலாம்
கண் மூடிக் கொள்ளலாம்

பெண் 3 : உறங்கி விடுகிறாய் பெண்ணாய்
விழித்து எழுகிறாய் மலடாய்

பெண் 2 : இடையில் கரைந்தே போயினவா
பெண்
தவிப்புகள்?

பெண் 1 : போயிருக்கும்
போல....
வெறும்பாடைதான் கிடக்கிறதோ.....?

பெண் 3 : குறுக்கே பேசாதே
கேள்
இப்போதும் தவிக்கிறாயே பெண் என்று
என்று

பெண் என்று
ஏன்
பெண் என்று

பெண் 2 : ஆமாம் ஆமாம்

பெண் 1 : கண் மூடினால்
விழிக்குள் விரையும்
நினைவு
நினைவு
வருகிறது

பெண் 3 : எதை எதையோ தவிர்க்கத் தவித்து
தவித்து
உருகிய
தசை
திசு
நிணம்
மூலம்
மூலம் சொல்கிறதா நீ என்று
பெண் என்று
ஏன்
பெண் என்று

பெண் 1 : வெட்கம் ! வெட்கம்!

பெண் 2 : ஐயோ!
சொல்
சொல் முடி

பெண் 3 : பெண்ணை மற

பெண் 2 : எப்படி?

பெண் 1 : எப்படி?

பெண் 3 : பெண்ணைமற பெண்ணாய் மற
தவித்திரு தனித்திரு
தகித்திடு
தக தக தக தக தக
தக தக தக வென
தகித்திடு தகித்திடு தகித்திடு

பெண் 2 : பற்றிய நெருப்புத் துளிகள்

பெண் 1பெண் 3 : (இடைமறித்து)

www.padippakam.com

நனைந்து நனைந்து
அணைந்து அவிந்து
பாதாதி கேசம் பரமாய் இரு.
இப்போது பேசு... பேசு
பெண்ணியம்

பெண் 2 : (வியர்த்தபடி)

பெண் 1 : (சந்தேகமாய்)
இருப்பினும் பெண்ணே
தவித்திருக்கும்
அம்பாக்கு ஆகாயத்தியம் பார்
முளைக்கும்
எப்போதும் அவளில்
பீஷ்ம ஆதிக்கம்

பெண் 3 : (விழி மேலெழும்பி
முஷ்டிகள் தெறிக்க
கண்ணீர் பெருகி
வீழ்கிறாள்)

- ரெங்கா

மனிதர்கள் யாவரும் நல்ல
இலக்கியவாதிகள் என்ற
நம்பிக்கையும் போகும் வரை
பயணிக்க நினைத்து புது
இலக்கியம் படைப்போம் மானுடம்
மிளிர... என்ற முகப்பு
வார்த்தைகளுடன்.
காலாண்டிதழாக
கூடாரம்
ஆசிரியர்கள் : வன்மி
முடவை இளவரசு
ரா. தமிழ்ச்செல்வி
பூக்கொல்லை (அஞ்சல்)
பேராவூரணி - 614 804.
ஆண்டு சந்தா : ரூ. 20/-

மொழிப்பற்றெங்கே
விழிப்புற்றெழுக -
தேடுங்கள் - தெளிவு
பெறுங்கள்
போன்ற கருத்து மையங்களை
நோக்கி
வழி நடத்தும் பல்துறை
இருதிங்களிதழ்
நாளை விடியும்
ஆசிரியர் : பி.இர.அரசெழிலன்
4/7, முருகன் இல்லம்
பாரதிபுரம் முதல் தெரு.
கைலாசபுரம் (அஞ்சல்)
திருச்சி (மாவட்டம்) - 620 014.

கதவு
✆ (04566) 73322

5-36-4ஆ, பாரதி நகர்,
மின்வாரிய குடியிருப்புகள் (கிழக்கு)
அருப்புக்கோட்டை - 626 101.